Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU






முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 தை 06 சனிக்கிழமை (19.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 111
















# ஷிராணி பதவிநீக்க விவகாரம் மனித உரிமை அமர்வில் அறிக்கை



(ஜெனிவா)

ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலக்கியமை தொடர்பான அறிக்கையொன்றை எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் அமைப்பின் மாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐ.நா.வின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வெளியிட்ட அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலக்கியமை தொடர்பாக நான் ஆழ்ந்த கவலை அடைகின்றேன்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட விவகாரம் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தப்படுகிறது

இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் பாதக நிலைமையை ஏற்படுத்தும்

குறிப்பாக குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்க முனைப்புக்களுக்கு இவ்வாறான நடவடிக்கைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## கெற்பேலியில் இராணுவ முகாம் அமைப்பதற்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, கெற்பேலி பகுதியில் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான 64 பரப்பு காணியில் இராணுவத்தினர் முகாம் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு இராணுவம் கடந்த வருடம் யாழ். மாவட்ட காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிடம் கோரியிருந்தது.

இந்நிலையில், அதற்கான அனுமதியினை ஆணைக்குழுவின் தலைவர் நிமல் வி.புஞ்சிஹேவா வழங்கியுள்ளதாக ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி என்.விமலராஜ் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்கங்கள் பேசுவதன்மூலமே மீனவர் பிரச்சினையை தீர்க்கலாம்

### கூறுகிறார் எமிலியாம்பிள்ளை

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு இருநாட்டு அரசாங்கங்களும் பேச்சு நடத்தி விரைவில் எமக்கொரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். மீனவர்கள் பேசினால் எந்தவிதமான பயனும் கிடைக்கப்போவதில்லை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையால் எமது மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு இரு நாட்டு அரசுகளிடமும் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை எந்த

19 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ். நகரில் நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மூன்று நாட்கள் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ். துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கைத்தொழில் வ்ணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோர் வைபவரீதியாக நாடா வெட்டி இந்தக் கண்காட்சிக்கூடத்தை திறந்து வைத்தனர்.

நான்காவது தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, கைத தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இலங்கை வர்த்தக கைத் தொழில் சங்கங்களின் சம்மேளனம், யாழ். மாநகரசபை, இலங்கை மாநாடுகள் பணியகம் ஆகியன இணைந்து இந்திய துணைத்தூதரகத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்திருந்தன.

முன்னதாக இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ். நூல்நிலைய கேட்போர்கூடத்தில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட வர்த்தக கைத் தொழில் மன்றத்தின் தலைவர் பூரணச்சந்திரன் தலைமைவகித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ், முஸ்லிம் இனங்களிடையே மன்னாரில் பதற்றநிலை அறிகுறி

### பிரான்ஸ் தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான பதற்றநிலை மன்னார் மாவட்டத்தில் ஏற்படுவதற்கான அறிகுறிகள் கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களுக்கு இல்ங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர் கிறிஸ்ரின் றொபிகோன் மேற்கொண்ட விஜயத்தை அடுத்து தூதரகம் மேற்கண்டவாறு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தூதுவர் தனது பயணத்தின் போது, இருமாவட்டங்களினதும் மேலதிக அரசாங்க அதிபர்கள், மறைமாவட்டங்களினதும் ஆயர்கள், ஏனைய மதத்தலைவர்கள், குடியியல் சமூகப் பிரதிநிதிகள், ஐ.நா. முகவர் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது, இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளாலும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு இருவர் கைது, இருவர் தலைமறைவு

### ஊர்காவற்றுறையில் கொடூரம்

(யாழ்ப்பாணம்)

நான்கு இளைஞர்களால் சிறுமி மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்ட சம்பவம் ஒன்று ஊர்காவற்றுறையில் நடைபெற்றுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இச்சம்பவம் முதலாம் வட்டாரம் ஊர்காவற்றுறையில் இடம் பெற்றுள்ளது. 15 வயதுச் சிறுமியை காதலிப்பதாக கூறி பாலியல் உறவு மேற்கொண்டு விட்டு சிறுமியை 4 நபர்கள் ஏமாற்றியுள்ளனர்.


இதைச் சாட்டாகக் கொண்டு பல தடவைகள் வல்லுறவு மேற்கொண்டதாகவும் இது பற்றி ஊர்காவற்றுறை பொலிஸில் பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்து 19, 20 வயதுடைய 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதோடு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 2 சந்தேகநபர்களும் தலைமறைவாகியிருப்பதால் அவர்களைத் தேடி பொலிஸார்

19 ஆம் பக்கம் பார்க்க

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
அதிர்ஷ்டசாலி யார்?
ப்டிவத்தை நிரப்பி பரிசுகளை வெல்லுங்கள்!
இலவச
உள்நாட்டு கல்வி-தொழில் வழிகாட்டி
30% விசேட கழிவுடன்
UK, Australia, New Zealand, Canada, America & Malaysia பல்கலை அனுமதி
50.000/= வருமானத்துடன் Hotel Management
உள்நாட்டு முன்னணி கம்பனிகளில் வேலைவாய்ப்பு வழங்கும் தொழில் திறன் விருத்திப் பயிற்சிநெறி
(C/1781)
இந்தச் சலுகை இன்றும் நாளையும் மட்டுமே
யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி கல்வியரங்கின்
காட்சியறை இல.144

# வர்த்தக உறவுகளின் பாலம் அமைச்சர் டக்ளஸ் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

நான்காவது தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சி வடக்கிற்கும் தென்னிலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையேயான வர்த்தகத் தொடர்புகளின் பாலமாக அமையும் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்குப் பகுதியில் ஆரம்பமாகிய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாறு வடக்கிற்கும் தென்னிலங்கைக்கும், தென்னிந்தியாவிற்கும் இடையில் வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்த இந்த அரசாங்கம் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் என்பதுடன் இந்தக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்களுக்குத் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் தொடர்ந்து தெரிவித்த அமைச்சர் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை இந்த வருடம் இறுதியில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்ததுடன் இந்தக் கைத தொழில் பேட்டையில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு சகலவிதமான உதவிகளும் செய்து தரப்படும் என்றும் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், சிலர் நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுக்க முடியாமல் வாாத்தையாலங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறனர். சுயலாப அரசியலுக்காகவே அவர்கள் இவ்வாறு கதை புனைந்து வருகின்றனர.

இந்தியத் துணைத்தூதர் மகாலிங்கம் தெரிவித்ததாவது கடந்த வியாழக்கிழமை பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்தேன். யாழ் தேவி விரைவில் யாழ். வரும் என்றவாறு செய்தி வெளியாகியிருந்தது. உண்மையில் பார்க்கும் போது அவ்வாறு வரும் என்பதே தோன்றுகிறது. ஆனால் சுயலாப அரசியல் வாதிகள் ஏன் இந்தப் புகையிரதம் இப்போது தேவையா? என்று மக்களைக் குழப்புகின்ற விதத்தில் கதைவிடுகின்றனர் என்றும் தெரிவித்த அமைச்சர் தற்போது சமாதான சூழல் ஏற்பட்டுள்ளது. அந்தச் சூழலை நாம் பாதுகாத்துக்கொள்ள வேணடும் என்று கேட்டுக்கொண்டார்.

# பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகநபர் கைது



சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப பட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி 15 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 25 வயது வாலிபர் ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்ததுடன் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாக வாராந்த செய்தியாளர் மாநாட்டில் யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.எரிக் பெரேரா தெரிவித்தார். (இ)

## கண்காட்சி

தரம் -03 மாணவர்களுக்கான குழுமுறைக் கற்பித்தலும் கண்காட்சியும் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.ரகுநாதன் கலந்துகொள்வார். வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் கண்காட்சி நடைபெறவுள்ளது. (109)

## வெங்காயச் செய்கையாளர் பாதிப்பு

அண்மையில் பெய்த மழையினால் வெங்காயப் பயிர்ச்செய்கையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக பெய்து வந்த மழை காரணமாக காலபோக வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளே இவ்வாறு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இப் பயிர்ச்செய்கைக்கு பெயர்போன, வசாவிளான், வளவாய், அச்சுவேலி, இடைக்காடு, புத்தூர், சிறுப்பிட்டி, போன்ற தாழ்நிலப் பிரதேசங்களில் மதிமிஞ்சிய வெள்ள நீர் வற்றாது தோட்டங்களுக்குள் நின்று பயிரினை மூடியுள்ளதால் பயிர்செய்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (15)

# வேலணைப் பிரதேச சபை - வேலணை பொது அறிவித்தல் - 2013

**01. பட வரைஞராகப் பதிவு செய்தல் - 2013**

2013 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2013**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருட்களை விநியோகிப்போர் 2013 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி, உரிய கட்டணங்களை 31.03.2013 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1 வேலணைப் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பனவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத் தருகின்றேன்.

எனவே வேலணைப் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2013**

2013 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05. சூழல் பாதுகாப்பு உரிமம்.**

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்குட்பட்டு 1533/16 இலக்க, 25.01.2008 ஆம் திக்திய, மற்றும் 1534/18 இல்க்க 01.02.2008 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை / தொழிலை நடாத்துகின்றவர்கள் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**06. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், சாட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.04.2013 ஆம் திகதிக்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**07. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள் இறைச்சி விற்பனையைத் தடைசெய்தல்**

வேலணை பிரதேச சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடை அமைந்துள்ள பகுதிகளில் 500 மீற்றர் வரையான சுற்றாடலில் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**08. பொது இடங்களில் கழிவுகளைப் போடுதல்**

வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றிக் கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுசூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

வேலணைப் பிரதேச சபை,
வேலணை.

சி.சிவராசா,
தவிசாளர்.

(C/2294)

# பொது இடங்களில் இருந்து மது அருந்தினால் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள் பொது இடங்களில் மது அருந்துவோர் மீது இனி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள், பாடசாலைகள் என்பனவற்றிற்கு அருகில் இளைஞர்கள் மாலை அல்லது இரவு வேளைகளில் மது அருந்துவதாகவும் அருந்திய மதுப் போத்தல்களை இவ்விடங்களில் எறிவதாகவும் பொதுமக்கள் பல இடையூறுகளுக்கு ஆளாவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று அவற்றுக்குப் பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் கூட 23 பேர் கைது செய்யப்பட்டுள்னர். இவ்வாறு பொது இடங்களில் மது அருந்துவோரைக் கண்டால் உடனடியாகப் பொலிஸாருக்கு முறையிடுமாறும் அதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இவ்வாறான குற்றச் செயல்கள் பற்றித் தகவல்கள் கிடைப்பதாகவும், இதற்கு இனிமேல் கடும் நடவடிக்கை மேற கொள்ளவுள்ளதாகவும், கைது செய்யப்படுவோர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தததமது பிரதேச பொலிஸ் நிலையங்களுக்குத் தொலைபேசி மூலமாகவேனும் உடன் தகவல் வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

எனது கவனத்திற்கு இவ்வாறான சம்பவங்கள் பற்றி உடன் அறியத்தந்தால் உடன் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (இ)


## சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சபாரி மோட்டார் சைக்கிள் 15 HP இஞ்சின் மோட்டர், ஹொண்டா மோட்டார் சைக்கிள் CD 125 என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு எம்.இக்பால் 171, அலிபா அப்துல்காதர் வீதி (நாவலர் வீதி), ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் - 0773266450 (C/1780)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கையில் ஒரு பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- க.சீவரட்ணம் அல்லது சிவராசா, றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/163)


# யாழில் சர்வதேச வர்த்தக கண்காட்சி...

















யாழ்.துரையப்பா விளையாட்ட ரங்கில் சர்வதேச வர்த்தக கண்காட்சி நேற்று கோலாக லமாக ஆரம்பமாகியதுடன், இன்றும், நாளையும் நடைபெற வுள்ளது. இக் கண்காட்சியின் ஆரம்பநாள் நிகழ்வுகளின் பதிவுகள்...

(படங்கள்: பா.பார்த்தீபன்)

## கல்விக்கொள்கை வலுப்பெறுவதற்கு விவேகானந்தரின் பணிகள் அளப்பரியது

### - கலாநிதி ஆறு.திருமுருகன் -

(திருநெல்வேலி)

அமெரிக்காவில் சிக்காக்கோ மாநிலத்தில் சுவாமி விவேகானந்தரின் பெயரால் பல நிறுவனங்கள் இயங்குகின்றன. சுமார் பதினொரு ஆங்கிலேயப் பெண்மணிகள் அங்கு விவேகானந்தரின் பெயரில் இயங்கும் ஆச்சிரமத்தில் துறவிகளாக இருப்பதை நான் நேரில் கண்டேன் என கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனனதின விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் சட்டத்தரணியும், கொழும்பு விவேகானந்தா சபையின் தலைவருமான சுரேந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

சுவாமி விவேகானந்தர் 39 வருடங்கள் மட்டுமே இவ்வுலகில் உயிருடன் வாழ்ந்தார். இக்குறுகிய காலத்தில் நின்று நிலைக்க்கூடிய பல உயரிய ஆத்மீகப் பணிகளை அவர் நிறைவேற்றினார். சுவாமி உலக ஆன்மீக மாநாட்டில் உரையாற்றிய மண்டபத்தின் அருகே செல்லும் ஐந்து பாதைகளைக் கொண்ட பெரிய தெருவுக்கு சுவாமி விவேகானந்தர் வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேலைத்தேயத்தவர்கள், கீழைத்தேயத் துறவிக்கு கொடுத்த கௌரவத்தை இதனால் உணரமுடிகின்றது. கொழும்பு தமிழ்ச் சங்க வீதிக்குப் பெயர் சூட்டுவதில் எம்மவரிடையே எத்தனை இழுபறிகள் ஏற்பட்டன.

பல பாடசாலைகள் உயர் சாதியினருக்கு மட்டும் ஒரு காலத்தில் திறந்திருந்தன. விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயத்துக்குப் பின்னரே எல்லோருக்கும் கல்வி என்னும் கொள்கை எம்மக்களிடையே வலுப்பெற்றது எனக்கூறினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக்கேகாந்தா கலந்து கொண்டார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் முதல்வரும் ரிஷி தொண்டுநாத சுவாமிகளும் ஆசியுரைகளை வழங்கினார்கள். தொடக்கவுரையை அகில இலங்கை இந்து மாமன்றத்தலைவர் கந்தையா நீலகண்டன் ஆற்றினார். விவேகானந்தசபை நடத்திய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (137)

## சிறந்த நூற்பரிசுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடாத்தப்படும் சிறந்த நூற் பரிசுப் போட்டி - 2012 இற்கு எழுத்தாளர்களிடமிருந்து நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டி தொடர்பான படிவத்தை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். நூல்கள் யாவும் 2012 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

அத்துடன் நூலாசிரியர் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் ஒன்றினைப் பிறப்பிடமாகக் கொண்டவராக (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி) இருப்பதுடன் நூலின் நான்கு பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நூல் பிரதிகளை அனுப்புவோர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குமுன்னர் கிடைக்கக்கூடியதாக, பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வலயக் கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற் பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

அத்துடன் போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு 021 3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## உலகெங்கும் இயற்கைக் குளறுபடிகள்

2012, அமெரிக்காவின் வரலாற்றில் கடந்த சில நூறாண்டுகளில் மிக உஷ்ணமான ஒரு வருடம் என்று நியூயோர்க் ரைம்ஸ் குறிப்பிட்டிருக்கிறது. தொடர்ந்த வறட்சியின் காரணமாக அமெரிக்காவில் பெரும்பகுதிகளை இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அரசு அறிவித்துள்ளது. கடந்த 118 ஆண்டு காலங்களில் மிக அதிகமான வெப்ப நிலை சென்ற வருடம் நீடித்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமேஸான் மழைக்காடுகள் நிரம்பிய பிரேஸிலிலும் அதிசயமாக வறட்சி. சீனாவில் தொடர்ந்த பனிப் பொழிவின் சுமை தாங்காது ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்தன. பிரிட்டனில் சென்ற வருடம் கொட்டித் தீர்த்த மழையில் பல ஊர்கள் மூழ்கி, மக்களைப் படகுகளில் போய்க் காப்பாற்றினார்கள். வழக்கமாக சுமாரான குளிர் இருக்கும் மேற்கு ஆசியாவில் இந்த வருடம் அடர் பனிப்பொழிவு.

அவுஸ்திரேலியாவில் 40 பாகை செல்ஸியஸ்"க்கு வெப்பம் உயர்ந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் காட்டுத் தீ எரிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு புறம் நோர்வே அருகில், கிரீன்லாந்தருகில், ஐஸ்லாந்தருகில் எல்லாம் ஆயிரமாண்டுகளாகக் கிடந்த பனிப்பாளங்கள் உருகி நீராகின்றன. சில இடங்களில் அமெரிக்க நாட்டின் அளவுக்குப் பரந்த பனிக்கட்டித் தளங்கள் உருகி விட்டனவாம்.

போகப் போக இந்த தட்ப வெப்ப நிலை மாறுதல்கள் மேன் மேலும் சீற்றமடையவே வாய்ப்பு அதிகம் என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவிப்பதாக சொல்கிறது நியூயோர்க் ரைம்ஸ்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவரான ஜேம்ஸ் ஹான்ஸன் பருவநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து வருபவர். அவரது ஆய்வின் படி, மிகக் கடுமையான– வெப்பநிலை கொண்ட கோடைப் பருவங்கள் தற்போது மிகவும் அதிகரித்துள்ளன. பருவநிலை மாற்றங்களால் 1951 முதல் 1980 ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக உலகின் மொத்த நிலப்பரப்பில் 0.1 முதல் 2 வீதமே பாதிப்பிற்குள்ளாயின. ஆனால் தற்போது 10 வீத நிலம் பாதிப்பிற்குள்ளாகிறது.

தொழிற்சாலையிலிருந்து வரும் புகை, கழிவுநீர், வாகனங்களின் புகையால் வரும் மெதேன், காபனீரொட்சைட், நைதரஸ் ஒட்சைட், குளோரோ புளோரோ காபன் போன்றவை பூமிக்கு மேற்பரப்பில் தங்கிவிட்டன. அதன் காரணமாக பூமி சூடானால் வெளிவிடும் அகச்சிவப்புக் கதிரை வெளியே விடாமல் தடுத்து, மேல் தங்கி உள்ள இந்த வாயுக்கள் மீண்டும் பூமிக்கே அனுப்பி விடுகின்றன. விளைவு பூமி சூடாகிக் கொண்டே வருகிறது. புவி வெப்பமடைவதால் பனிமலைகள் உருகுகின்றன. இதனால் கடல் நீர் மட்டம் அதிகரித்து ஒட்டு மொத்த உலகமும் நீரால் சூழப் போகிறது என்று எச்சரிக்கிறது அறிவியல்.

தடுக்க என்ன செய்யலாம்? தொழிற்சாலைகளை சீர்படுத்துவது, கழிவுநீரை சரியான முறையில் வெளியேற்றுவது, வாகனங்களுக்கு மாற்று எரிபொருளை உருவாக்குவது, அணுமின், அணுஆயுதம் போன்றவற்றை குறைத்தல் அல்லது தடுத்தல், மோட்டார் வாகன உற்பத்தியைக் குறைத்தல், சைக்கிள்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல், பொதுப் போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்தல், இவை அரசாங்கங்கள் செய்ய வேண்டியவை.

பொது மக்களாகிய நாம், பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதை கைவிட வேண்டும். காடுகளை அழிக்காமல் இருக்க வேண்டும். மரங்கள் வளர்க்க வேண்டும். வீடுதோறும் செடிகள் வளர்க்க வேண்டும். நவீன உபகரணங்களை வாங்கிக் குவிப்பதை குறைக்க வேண்டும்.

- ஆசிரியர்

# புற்றுநோய் மருந்து வகைகளை கொள்வனவு செய்ய உத்தேச சபை

(கொழும்பு)

புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான மருந்து வகைகளை கொள்வனவு செய்வது தொடர்பில் சபையொன்றை ஸ்தாபிக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அரச வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வரும் நோயாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்காக கடந்த வருடத்தில் சுகாதார அமைச்சு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

சுமார் ஐயாயிரம் நோயாளர்களுக்கான மருந்து வகைளை கொள்வனவு செய்வதற்காகவே குறித்த தொகை செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

புற்றுநோய்க்கான மருந்து வகைகள் அதிக விலைகளைக் கொண்டுள்ளதால் அவற்றை நோயாளர்களால் கொள்வனவு செய்வதற்கு முடியாதுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

நோயாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டாலும் கவலைக்கிடமான நிலையிலுள்ள அநேகமான நோயாளர்கள் குறுகிய காலத்திற்குள் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்காலத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான மருந்து வகைகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கையை உத்தேச சபையின் ஊடாக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கடற்றொழில் பயிற்சிக்கு புதிய மாணவர்கள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கடற்றொழில் மற்றும் கடல்சார் இயந்திரவியல் தேசிய நிறுவகம் (சமுத்திர பல்கலைக்கழகம்) 2013ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்காக புது மாணவ, மாணவிகளைச் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளை தற்போது ஆரம்பித்துள்ளது.

இதற்கு அமைய பயிற்சியளிக்கப்படும் பட்டப் படிப்பு பயிற்சிகளாவன கடலக இயந்திரவியல் விஞ்ஞானமானி, கப்பல் கட்டுமான கல நிர்மாணத் துறையில் விஞ்ஞானமானி, கடற்றொழில் மற்றும் கடலக விஞ்ஞானி (பொது), கடற்றொழில் மற்றும் கடலக விஞ்ஞானி (விசேட)வும், டிப்ளோமா பயிற்சி நெறிகளான டெக் அலுவலர் டிப்ளோமா, உயர் சான்றிதழ் வைபர் கிளாஸ் தொழில்நுட்பம், உயர் சான்றிதழ் - நீர்வாழ் உயிரினச் செய்கை மற்றும் முகாமைத்துவம், கடலக என்ஜின் பற்றிய டிப்ளோமாவும், சான்றிதழ் பாடநெறிகளான வெளியினை இயந்திரம் பழுது பார்த்தலும் பராமரிப்பு பாடநெறி, கடலக இயந்திரவியல் தொழில்நுட்பம், கடற்றொழில் தொழில்நுட்பம், கடலக வரைபு வாசித்தல் தொலைத் தொடர்பு செயற்கைக் கோள் செயற்பாடு தொழில்நுட்பம், நீச்சல் (தொழில்), நீச்சல் (பாடசாலை சிறுவர்களுக்கு) பாடநெறிகளும் நடமாடும் பயிற்சி நெறிகளான வெளியிணை இயந்திரம் பழுது பார்த்தலும், வலை பின்னுதலும் திருத்தலும், உணவு பதனிடலும் அறுவடைக்கும் பிந்திய முகாமையும், வைபர் படகு திருத்துதல் ஆகிய பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழ் காணப்படும் தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் இயந்திரவியல் பயிற்சி நிறுவகத்தின் மட்டக்குழி, தங்காலை, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், காலி, களுத்துறை ஆகிய கிளைகளுக்கு உதவிப் பணிப்பாளர், தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் இயந்திரவியல் பயிற்சி நிறுவனம் எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

எல்லா விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் வந்து சமர்ப்பிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு 0112 529865, 047 2242327, 031 2222458, 026 2233267, 065 2222490, 021 2226251, 091 2248489, 034 2237252 தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக தாக்குதல் சம்பவம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர் கள் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

இதேவேளை இந்தத் தாக்குதல் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் NDT எனப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா பாடநெறி பிரிவு மாணவர்களின் திட்டமிடலுடன் இடம்பெற்றிருக்கலாம் என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தச் சம்பவம் தொடர்பிலான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் குற்றவாளியான மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று குழுவிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

NDT மாணவர்களுடன் வருகைத் தந்த குழுவினரால் பொறியியல் பீடத்தின் விடுதிக்குள் உட்புகுந்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு மாணவர்கள் காயமடைந்தனர்.

தாக்குதலில் காயமடைந்த மாணவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சைப்பெற்று வருகின்றார்.

# மரக்கறி விலைகளில் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் மரக்கறி வகைகளின் விலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

சில பகுதிகளில் கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடுகையில் மரக்கறி வகைகளின் விலைகளில் நூறு வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையால் மரக்கறிச் செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தமையே விலை உயர்வுக்கான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயிகளிடமிருந்து சந்தைக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் அளவு குறைவாகக் காணப்படுவதாக தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமையாளர் பிரஷான் இந்திரஜித் கூறியுள்ளார். இதேவேளை விலை உயர்வு காரணமாக சில மொத்த வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு அதிக விருப்பம் தெரிவிப்பதில்லையென தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். மழையை அடுத்து விவசாயிகள் நெற்செய்கைக்கு முக்கியத்துவம் அளித்து செயற்படுவதால் மரக்கறி உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது சந்தையில் தமது உற்பத்திகளுக்கு அதிக விலை கிடைப்பதாக மரக்கறி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்க் குடாநாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களும், சமூகச் சீர்கேடுகளும்!

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களும், சமூகச் சீர்கேடுகளும் அதிகரித்து வருவதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்தக் குற்றச் செயல்களும், சீர்கேடுகளும் பலவகைப்பட்டன. நேரடியாக வீடுகளில் புகுந்து கொள்ளை அடிப்பது, தனியாகச் செல்லும் பெண்களிடம் நகைகளைப் பலவந்தமாக அபகரித்துச் செல்வது, கோவில்கள், பொது நிறுவனங்களில் புகுந்து கொள்ளையிடுவது என்பவை ஒரு ரகம். இவைகள் அநேகமாக ஆயுத முனைகளில் நடப்பவை.

இன்னொரு வகை ஏமாற்றிப் பணம் பறிப்பது. வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இலட்சக் கணக்கில் பணம் கறப்பது, உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் பெறுவது, மதுபான லைசென்ஸ் போன்ற அரச அனுமதிகள் பெற்றுத் தருவதாகச் சொல்லி பணம் கறப்பது, அடையாள அட்டை, கடவுச் சீட்டு போன்ற அத்தியாவசிய ஆவணங்களைக் குறுக்கு வழியில் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வசூலிப்பது போன்ற பலவகை மோசடிகளும் நடைபெறுகின்றன.

இதுதவிர, பாலியல் வன்செயல்கள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், அடிதடி, வீதிகளில் செல்லும் பெண்கள் மீது வாய்வழி பாலியல் தொந்தரவுகள் செய்வது, ஆபாசப் படங்களை குழுக்களாகச் சேர்ந்து பார்ப்பது, பாலியல் வல்லுறவின் பின் சிறுமிகளையும், இளம் பெண்களையும் கொலை செய்வது, திட்டமிட்ட கொலைகள், காணி - வீடு சம்பந்தமான சொத்துத் தகராறுகள், கள்ள உறுதிகள் தயாரித்து வெளிநாடுகளில் உள்ளவர்களின் காணிகளை விற்பனை செய்வது போன்ற சமூக விரோதச் செயல்களும் நடந்த வண்ணம் உள்ளன.



இவ்வகையான செயற்பாடுகள் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் நடைபெறாமல் இல்லை. குறிப்பாக 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாகவே, இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் மிகப்பெரிய அளவில் அதிகரிக்கத் தொடங்கின.

ஆனால் தற்பொழுது வடக்கில் நடைபெறும் சம்பவங்களே மிகப்பெரிய அளவில் உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச அரங்கிலும் புலி சார்பு ஊடகங்களால் பெரிதுபடுத்திப் பிரசாரம் செய்யப்படுகின்றன. உண்மையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது உண்மை என்ற போதிலும், அதற்கான காரணங்களை இந்த ஊடகங்கள் திட்டமிட்டுத் திரிபுபடுத்திப் பிரசாரம் செய்கின்றன. வடக்கில் பெருமளவு இராணுவப் பிரசன்னம் இருப்பதால், இந்தவாறான குற்றச் செயல்களுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பு உள்ளது என்று இவை காட்ட விரும்புகின்றன. அல்லது அரசுடன் இணைந்து அபிவிருத்திக்காகச் செயற்படுவோர் மீது பழியைப் போட முயல்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை இவ்வாறான செய்திகளை வெளியிடும் போது, நாசூக்காக செய்தியின் முடிவில் 'சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு 50 மீற்றர் தூரத்தில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது' எனச் செய்தி வெளியிடுவது ஒரு வழமை. அதற்காக இராணுவம் தூய்மையான அப்பாவிகள் என வாதிடுவது அல்ல எமது நோக்கம்.

## வானவில் 24 இதழ் கட்டுரையிலிருந்து…

**இந்தப் பிரசாரம் இரண்டு அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று, தமிழினம் உலகிலேயே பரிசுத்தமான, மிகவும் தூய்மையான ஒரு இனம். அதனிடம் உள்ளதெல்லாம் நூற்றுக்கு நூறு வீதம் நல்ல விடயங்கள் மட்டுமே. அவர்களிடம் ஏதாவது தீய விடயங்கள் காணப்படுமாயின் அவை வெளிச் சக்திகளால் திணிக்கப்பட்டவையே. இரண்டாவது, யாழ்ப்பாண மேட்டுக்குடியினரின் 'ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் தவறென்ன?' என்ற கேள்விக்கும் ஏக்கத்துக்கும் செயல் வடிவம் கொடுக்க வந்த புலிகளை மீளவும் புனருருவாக்கம் செய்வதற்கு, அவர்கள் இல்லாத தமிழ் சமூகம் 'படும்பாட்டை'ப் பற்றிப் பிரசாரம் செய்வதாகும்.**

தற்பொழுது வடக்கில் நடைபெறும் குற்றச் செயல்களை வைத்துக் கொண்டு தமிழ் தேசியவாதிகளின் பிரதான கூடாரமான தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், புலிகளின் வாரிசுகள் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் சில தீவிர தமிழ் இனவாத உதிரிக் கட்சிகளும் (மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள்), தமிழ் மக்களின் பாதுகாவலர்களான புலிகள் அழிக்கப்பட்ட பின்னர்தான் தமிழ் பகுதிகளில் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன எனப் பிரசாரம் செய்கின்றன. இதே கருத்தையே புலம்பெயர் புலி சார்பு ஊடகங்களும் திருப்பிக் கூறுகின்றன. அத்துடன் அரசாங்கம் திட்டமிட்டே இவ்வாறான செயல்களை வடக்கில் உருவாக்கித் தமிழ் இனத்தை சீரழிக்க முயல்கின்றது என்றும் பிரசாரம் செய்கின்றன.

இந்தப் பிரச்சாரம் இரண்டு அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று, தமிழினம் உலகிலேயே பரிசுத்தமான, மிகவும் தூய்மையான ஓர் இனம்.அதனிடம் உள்ளதெல்லாம் நூற்றுக்கு நூறு வீதம் நல்ல விடயங்கள் மட்டுமே. அவர்களிடம் ஏதாவது தீய விடயங்கள் காணப்படுமாயின் அவை வெளிச் சக்திகளால் திணிக்கப்பட்டவையே. இது ஒரு காரணம். இரண்டாவது, யாழ்ப்பாண மேட்டுக்குடியினரின் 'ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் தவறென்ன?' என்ற கேள்விக்கும் ஏக்கத்துக்கும் செயல் வடிவம் கொடுக்க வந்த புலிகளை மீளவும் புனருருவாக்கம் செய்வதற்கு, அவர்கள் இல்லாத தமிழ் சமூகம் 'படும்பாட்டை'ப் பற்றிப் பிரசாரம் செய்வதும் அவர்களது நோக்கமாகும்.

ஆனால் இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது, கிழக்கு மாகாணத்திலும் கணிசமான தமிழர்கள் வாழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்தவர்கள் வசதியான வாழ்க்கை தேடி வெளிநாடுகளுக்கு ஓடிப்போன அளவுக்கு கிழக்கு மாகாணத்தவர்கள் ஓடிப் போகவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்கள்தான் 'தமிழ் மண்'ணைப் பாதுகாத்து, சொந்த மண்ணில். வாழ்பவர்கள். அவர்களது பிரதான நகரங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறையின் தமிழ் பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் நிகழ்வது போன்ற குற்றச் செயல்கள், சமூகச் சீர்கேடுகள் ஏன் பெரிய அளவில் நடைபெறவில்லை?

உண்மையான காரணங்களை இலங்கையில் இருக்கும் சில சமூக ஆய்வாளர்களும், வெளிநாடுகளிலிருந்து வடக்கு கிழக்கிற்கு சென்று வந்த ஆய்வாளர்களும் சில ஊடகங்கள் வாயிலாக முன்வைத்திருக்கிறார்கள். அவர்கள் வந்தடைந்த முடிவுகளைப் பார்க்கும் போது இந்தக் குற்றச் செயல்களின் பின்னணியை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.

முதலாவது விடயம், புலிகளின் காலத்தில் இந்த அளவுக்கு மக்கள் மத்தியில் குற்றச் செயல்கள் நடைபெறவில்லை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க விடயம்தான். அதற்கொரு காரணம் தமிழ் மக்களுக்கு இன்று கிடைத்திருக்கும் சுதந்திரமும், வசதிகளும் புலிகளின் அடக்குமுறை ஆட்சியின் கீழ் இல்லாமல் இருந்ததுதான்.

இன்று புலிகள் அழிந்த பின்னர் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கும் கேட்பார் யாருமற்ற சுதந்திரமான வாழ்க்கை அன்று இருக்கவில்லை. மக்களிடம் அடிப்படைத் தேவைகளுக்கே போதிய பணம் இருக்கவில்லை. மக்கள் தமது வீடுகளில் நிம்மதியாக இருக்க முடியாமல் அவர்களை யுத்தம் அங்கும் இங்குமாகத் துரத்திக் கொண்டிருந்தது. புலிகளிடமிருந்து தமது பிள்ளைகளைப் பாதுகாக்க மக்கள் அல்லும் பகலும் போராட வேண்டியிருந்தது.


இன்று கிடைத்திருப்பது போல எந்த நேரத்திலும் நாடு முழுவதும் சுற்றித்திரியக்கூடிய போக்குவரத்து வசதிகளோ, மின்சார வசதியோ, வீட்டுக்கு ஒரு ஆட்டோவோ அல்லது பல மோட்டார் சைக்கிள்களோ, தொலைக்காட்சி பார்க்கும் வசதியோ, குளிர்சாதனப் பெட்டியோ, ஆளுக்கொரு கைத்தொலைபேசியோ அல்லது வீட்டுத் தொலைபேசியோ, வெளிநாட்டு உறவினர் வருகையோ, கோவில் திருவிழாக்களோ, விளையாட்டுப் போட்டிகளோ, களியாட்ட விழாக்களோ, உத்தியோக வாய்ப்புகளோ, இது போன்ற இன்னும் எண்ணற்ற வசதிகளோ புலிகளின் காலத்தில் இருக்கவில்லை.

இவையெல்லாம் இலங்கையின் ஏனைய பாகங்களில் ஏற்கெனவே இருந்தும், அங்கு இல்லாத அளவில் யாழ்ப்பாணத்தில் மட்டும் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளதென்றால், அதற்குக் காரணம் 'கண்டறியாததைக் கண்டதும்' வரும் ஒரு வேகமான ஆகர்சிப்புத்தான். குறிப்பாக இந்த 30 வருடப் போர் நடைபெற்ற காலத்தில் பிறந்த ஒரு குழந்தை, இப்பொழுது 30 வயதிலிருந்து 13 வரையிலான இளம் பருவத்தினராக இருப்பார்கள். அவர்களுக்கு முன்பு இந்தவாறான வாழ்க்கை வசதிகள் கிடைத்திருக்க வாய்ப்பிருந்திருக்காது. இப்பொழுது அது கிடைத்து நெறிப்படுத்தலும் இல்லையென்றால், அவர்கள் கட்டறுந்த காளைகளாகத்தான் செயற்படுவார்கள்.

இன்னொரு காரணி, மற்றைய பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்களுக்குக் கிடைக்காத அளவுக்கு யாழ்ப்பாணத்தவர்களுக்குக் கிடைத்து வரும் வெளிநாட்டுப் பணம்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# நீதியரசர் நியமன சர்ச்சையால் பங்குச் சந்தையில் தாக்கமில்லை



(கொழும்பு)

நாட்டின் பிரதம நீதியரசர் நியமனம் குறித்து தொடர்ச்சியாக நிலவி வந்த சர்ச்சைக்கு மத்தியில் பல்வேறு தரப்புகளிலிருந்து நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதகமான சூழ்நிலை எழும் எனும் கருத்து பரவலாக முன்மொழியப்பட்டிருந்த போதிலும், கொழும்பு பங்குச்சந்தையின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில், இந்த செயற்பாடு எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக முன்னாள் பிரதம நீதியரசர் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேறியிருந்தமையை தொடரந்து, நேற்று முன்தினம் பங்குச் சந்தை நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருந்தன. இதன் போது, பரவலாக அனைவரும் சந்தை நடவடிக்கைகள் மந்தமடையும் என எதிர்பார்த்த போதிலும், அந்த எதிர்பார்ப்புகளை தகர்க்கும் வகையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு கொடுககல் வாங்கல்களில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், உள்நாட்டை சேர்ந்த சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடும் சந்தையில் பரவலாக காணப்பட்டது.

இதனை தொடர்ந்து, பங்கு கொடுக்கல் வாங்கல்கள் நிறைவடையும் பொழுது, பிரதான சுட்டெண்ணான அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5800 புள்ளிகளை கடந்து நிறைவடைந்திருந்தது. கடந்த ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் முதல் தடவையாக அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5800 புள்ளிகளை கடந்திருந்தமை இதுவே முதல் தடவையாகும்.

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்வதில் முதலீட்டாளர்கள் அதிகளவு ஆர்வத்தை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இறுக்கமான நாணயக்கொள்கை எதிர்காலத்தில் தளர்த்தப்படும்

இறுக்கமான நாணயக் கொள்கையை தகர்க்கக்கூடிய காலம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.மத்திய வங்கியின் ஆளுனர் அஜத் நிவாட் கப்ரால் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நாணய விகிதங்கள் பொருத்தப்பாட்டுடன் உள்ளன.அடுத்த இரண்டு மாதங்களில் பணவீக்கம் சற்று அதிகரிக்கலாம் என்று கருதப்படுகின்ற போதும், அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.எனினும், கேள்வி நிரம்பல் பிரச்சினைகள் தீர்க்கமாக அனுகப்படுகின்ற நிலையில், எதிர்வரும் காலத்தில் நாணய கொள்கையை இறுக்கப் பாட்டில் இருந்து தளர்த்த கூடியதாக இருக்கும் என்று நம்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியலமைப்பை மீறி அரசாங்கம் செயற்படுகின்றது

## கூறுகிறார் சஜித் பிரேமதாச



(கொழும்பு)

அரசாங்கம் அரசியல் சாசனத்தை மீறிச் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். குற்றவியல் பிரேரணை அரசியல் அமைப்பிற்கு விரோதமானது.

இது ஓர் அதிசயமான அரசாங்கம், ஒரு சந்தர்ப்பத்தில் உச்ச நீதிமன்றின் தீர்ப்பு நியாயமானது, மறு சந்தர்ப்பத்தில் உச்ச நீதிமன்றின் தீர்ப்பு பிழையானது.ஜனநாயகத்தையும், நீதிமன்றத்தையும் பாதுகாக்க நாம் வீதியில் இறங்க வேண்டியுள்ளது.

நாட்டில் சர்வாதிகார ஆட்சி உருவாக்கப்பட்டு வருகின்றது. நீதிமன்றின் உன்னத தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.அன்று உச்ச நீதிமன்றம் சந்திரிகா அரசாங்கத்திற்கு வழங்கிய உத்தரவு சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த அரசாங்கம் தமக்கு தேவையான வகையில் செயற்பட்டு வருகின்றது. பிரதம நீதியரசர் வீதியில் இறக்கப்பட்டுள்ளார் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.கட்டான திம்பிரிகஸ்கட்டுவ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர்களைப் பயன்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்கள்



(கொழும்பு)

இந்த நாட்டு குழந்தைகளை கொண்டு பணம் சம்பாதிப்பதற்கு அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு ஒருபோதும் இடம்தர போவதில்லை என்று மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ச கரலியத்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் வறுமை நிலையில் உள்ள சிறுவர்களின் நிழற்படங் களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் ஊடாக, தமது நிறுவனங் களுக்கு நிதி திரட்டுவதினை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு உபாயமாக கைக்கொள்கின்றது. இதனை தடுக்க தேவையாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தமது அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் திஸ்ச கரலியத்த தெரிவித்தார்.

# தேயிலை ஏல விற்பனையில் அதியுயர் பெறுமதி பதிவு



கொழும்பில் நடைபெறும் தேயிலை ஏல விற்பனையின் போது, கரோலினா எஸ்டேட்டை சேர்ந்த PF1 தரத்திலான தேயிலைக்கு வரலாற்றில் அதியுயர் விற்பனை பெறுமதி பெறப்பட்டுள்ளது. வட்டவளை பெருந் தோட்ட கம்பனியின் மூலம் பராமரிக்கப்படும் கரோலினா எஸ்டேட்டை சேர்ந்த தேயிலை, கடந்த வாரங்களில் இடம்பெற்ற ஏல விற்பனைகளின் போதும் தொடர்ச்சியாக உயர் பெறுமதிகளை பதிவு செய்திருந்தது.


முன்னர் சாதனை பெறுமதியாக பதிவாகியிருந்த 500ரூபா எனும் பெறுமதியை கடந்து, 510ரூபா எனும் பெறுமதிக்கு ஒருகிலோ தேயிலை விற்பனையாகியிருந்ததாக கம்பனி அறிவித்துள்ளது. இந்த கொள்வனவை ரீஜின்சி டீஸ் நிறுவனம் மேற்கொண்டுள்ளதுடன், இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் தேயிலை ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடமாற்றம் இரத்து

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் ஏழு நீதிபதிக்கு வழங்கிய இடமாற்றங்கள் உடன் அமுலாகும் வகையில் நேற்று முன்தினம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்ற உத்தரவு அமைந்திருந்தது.எனினும் புதிய பிரதம நீதியரசர் மொஹான் பிரீஸ் இதனை இரத்துச் செய்தார்.

# ரயில்வே ஊழியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படும்



(கொழும்பு)

ரயில்வே தொழிற் சங்கங்கள் 56 மணித்தியால வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்கும் வேளையில் அவர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்காக பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன என போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

இதனால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பள உயர்வு வழங்காமை, பல்வேறு தரத்தில் உள்ள ரயில்வே ஊழியர்களின் சம்பள முரண் பாட்டை தீர்த்துவைக்காதிருத்தல் ஆகியவற்றுக்கு எதிராக 56 மணித்தியாலங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே ஊழியர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்தது. தமது குறைகள் தீர்த்து வைக்கப்படாது போகுமாயின் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என அச்சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார். எனினும் தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக அமைச்சு இதுவரை அறிவிக்கவில்லை. சம்பளம் மற்றும் ஊழியர்களின் பகுதி ஆணைக்குழுவுடன் அமைச்சு பேசி வருகின்றோம். இதனால் ரயில்வே ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும் என அமைச்சர் வெல்கம குறிப்பிட்டார்.

# குற்றப்பிரேரணைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய முடியாது



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை விவகாரம் நிறைவடைந்து விட்டது. அந்த குற்றப்பிரேரணையிலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிராக யாரும் வழக்குத்தாக்கல் செய்யமுடியாது. என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துக்கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


பிரதம நீதியசருக்கு எதிரான குற்றப்பிரேரணை விவகாரம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கை தொடர்பில் யாருமே இனி எதனையும் செய்யமுடியாது. குற்றப்பிரேரணையிலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிராக யாரும் நீதிமன்றத்திற்கு செல்லமுடியாது. இதேவேளை, புதிய நீதியரசர், முன்னர் வகித்த சகல பதவிகளில் இருந்தும் விலகி கொண்டதன் பின்னரே புதிய பதவியை பொறுப்பேற்றுள்ளார் என்றார்.

# கற்கை நிறுவனம் தியகமவுக்கு மாற்றம்

UNIVERSITY OF MORATUWA

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி (NDT) கற்கை நிறுவனத்தை தியகம பகுதிக்கு மாற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரத்ன தெரிவித்துள்ளார்.

NDT கற்கை மாணவர்களுக்கும் பொறியியல் பீட மாணவர்களுக்கும் இடையே நிலவும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தைப்பொங்கல் விழா நிகழ்வுகள் அண்மையில் சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் சபை முன்றலில் நடைபெற்றது. நிகழ்வில் சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.

# விரிவுரைகள் ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளிநொச்சி பிராந்திய நிலையத் தினால் கல்விமாணி பட்டப்படிப்பின் டிப்ளோமா கற்கைநெறிக்கான விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன.

2 வருடகால கற்கைநெறியான இக்கற்கைநெறியின் விரிவு ரைகள் கடந்த மாதம் ஆரம்பமாகி உரிய நேர அட்டவணைக்கு அமைவாக நடைபெற்றுவருவதாக நிலையத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது. (கே)

## முரசின் இன்றைய பலன்

(19.01.2013 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 06 ஆம் திகதி. நட்சத்திரம் அசுவினி முன்னிரவு 01.29 வரை. திதி அட்டமி முன்னிரவு 10.13 வரை. இராகுகாலம் 9.35 - 11.05 வரை. சுபநேரம் 3.35 - 5.05 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** சந்தோஷநினைவுகள் நண்பரிடம் பகிர்வு. புதிய திட்டம். தொழிலில் நேர்மைக்கு முக்கியத்துவம். இலாபம் கூடும். விவகாரம் ஒன்றில் அனுகூலமான தீர்வு.

**ரிஷபம்** செயல்களில் துணிச்சல். சார்ந்தவர்களுக்கு உதவி. தொழில், மந்தநிலை. குறைந்த பணவரவு. பய ணத்திட்டத்தில் மாற்றம்.

**மிதுனம்** சமூக நடப்பில் புதிய அனுபவம். உறவினர் உதவு வார்கள். தொழிலில், கூடுதல் மூலதனம். உரிய வரவு. சுபகாரியச்செலவு செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்** நட்புணர்வுடன் பழகுவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். கடின உழைப்பு. தொழில் உயர்வளர்ச்சி. பணவரவும், நன்மையும்.

**சிம்மம்** உயர்வான செயல்களால், சமூகத்தில் புகழ். நண்பர் உறவினர் உதவுவர். தொழில் சிறக்கும். கடன் வசூலாகும். உடல் நலம் பலம் பெறும்.

**கன்னி** தன்னலம் கருதாமல் செயல்படுவீர்கள். நட்பு வட்டம் பெரிதாகும். தொழில், இடையூறு விலகும். கூடுதல் லாபம். வெகுநாளாய் நினைத்ததை வாங்குவீர்கள்.

**துலாம்** உங்களால் பலன் பெற்றவர் உதாசீனம். கோபம். விவாதம் வேண்டாம். தொழில், வேலைச்சுமை இருக்கும். குறைந்த பணவரவு. வாகன பயணத்தில் கவனம்.

**விருச்சிகம்** சிலரது பரிகாசம் வருத்தம் தரும். பொறுமையால் நன்மை. தொழில், செழிக்க வாய்ப்பு. தேவைக்கு பணம் கிடைக்கும்.


**தனுசு** செயல் ஒன்று தாமதமாகலாம். மாற்று உபாயத்தால் நன்மை. தொழிலில், சச்சரவு போட்டி வரும். விலகி நடப்பதே நன்று. வரவை விட செலவு கூடும்.

**மகரம்** இடையூறாக தருபவரை அடையாளம் காண்பீர்கள். பெருந்தன்மையால் வெல்வீர்கள். தொழில் நன்மை. வரவை விட செலவு.

**கும்பம்** நண்பரிடம் கஷ்டங்களை பகிர்வீர்கள். மனதில் ஆறுதல். இஷ்ட தெய்வ சிந்தனை. தொழில், சிறக் கும். தாராள பணவரவு. விரும்பியது செய்வீர்கள்.

**மீனம்** அவசரப்பணி ஒன்று அல்லல் தரலாம். உறவுகளால் ஊக்கம். சமூகப்பணிகளில் ஆர்வம். தொழில், கூடுதல் பணிபுரிவீர்கள். பணவரவு சராசரி.

# தீவிரமான தொழில் முயற்சியின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்



யுத்த பாதிப்பை எதிர் கொண்டு பொருளாதாரத்தால் பின்தள்ளப்பட்டிருக்கும் எம் மக்கள் தொழிற்துறைகளில் தீவிரமாக ஈடுபடுவதனூடா கவே இழந்த பொருளாதா ரத்தை விரைவாக மீளக்கட்டி யெழுப்ப முடியுமென ஈ.பி.டி.பி யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் தெரி வித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அழகா புரி மக்களுக்கு சுமார் பதின் நான்கு இலட்சம்ரூபா பெறுமதி யான நன்நீர் மீன்பிடி உப கரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்,

நடைபெற்றுமுடிந்த யுத்தம் எம்மக்களை பொருளாதார ரீதியில் முடக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மிகவும் கீழ் நிலைக்குத்தள்ளியுள்ளது. இந் நிலையில் மீளவும் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை பூரண மாகப் பெற்றுக் கொள்வதற்கு கடுமையான உழைப்பும் இடை விடாத முயற்சியும் அவசியமாக உள்ளது. அந்தவகையில் அதிக முயற்சியும் ஆர்வமும் கொண்ட கிராமங்களைச்சேர்ந்த மக்கள் இன்று குறிப்பிடத்தக்க வாழ்வாதார முன்னேற்றத்தை எட்டியுள்ளனர்.

இந்நிலையில் இவ் அழகா புரி கிராம மக்களும் தமது வாழ்வாதார முன்னேற்றத்திற் காக தொடர்ந்து முற்சித்து வரு கின்றனர் அதில் அவர்கள் இன்று ஒருகட்ட வெற்றியையும் எட்டியுள்ளனர். இன்று கிடைக் கப்பெறும் இவ் (கரைச்சி கிழக்கு) அழகாபுரி நன்நீர் மீன்பிடி சங்கத்தினருக்கான பதின் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான வள்ளங்கள் உள்ளிட்ட தொழில் உபகரணங் களானது குறித்த சங்கத்தினரின் தீவிர முயற்சியின் காரண மாகவே கிடைத்துள்ளது. எனவே இதேபோன்று தொழில் ரீதியான செயற்பாடுகளிலும் இம்மக்கள் தொடர்ந்து முயற் சிக்குமிடத்து விரைவான பொரு ளாதார முன்னேற்றத் தினையும் சீரான வாழ்வாதாரத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நன்நீர்மீன்பிடித் துறை மாவட்ட விரிவாக்க அலுவலர் சலீபன். பிரதேச விரி வாக்க அலுவலர் திலீபன், யு.என்.எச்.சி.ஆர் நிறுவன வதிவிட பிரதிநிதி விக் டோரியா உள்ளிட்டபலர் கலந்து கொண்டனர்.

## நல்லூர் - புதுச்செம்மணி வீதியை புனரமைக்கக் கோரிக்கை


(அரியாலை)

நல்லூர் - புதுச்செம்மணி வீதி நீண்டகாலமாக புனரமைப்புக்கு உட்படுத்தப்படாமல் மிகமோச மாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக பயணங்களை மேற்கொள்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

செம்மணி வீதியிலிருந்து கல்வித் திணைக்களத் திற்கு வடக்காக பாரதி வீதிக்குக் கிழக் காகப்பிரிந்து வடமேற்காக கல்வி யங்காட்டுச் சந்தியின் வடக்காக வந்து பருத்தித்துறை வீதியை அடையும் இப்புதுச்செம்மணி வீதி நீண்ட வீதியாகக் காணப் படுகிறது.

இவ்வீதி தார் ஊற்றி புனர மைக்கப்படாத நிலையில் குண் டும் குழியுமாக காணப்படுவ தால் மழைகாலங்களில் வெள்ள நீர் தேங்கி சுகாதார சீர் கேட்டை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை வெள்ளநீர் தேங்கிநிற்பதால் வாகனப் போக்குவரத்துக்களும் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெறு வதாக தெரிவிக்கும் இப்பகுதி மக்கள், இவ்வீதியை புனர மைக்க உரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (23)



மல்லாவி ஹற்றன் நஷனல் வங்கியின் பட்டிப்பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றபோது வழிபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம். (140)

# குப்பைகளைக் கொட்ட இடமில்லை; சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேச சபை குப்பைகளை கொட்டுவதற்கு பொருத்தமான உரிய இடமின்றி சிரமப்பட்டு வருகின்றன. இவ்விரு சபைகளும் காலம் கால மாக புலோலி - ஆனைவிழுந்தான் பகுதியில் குப்பைகளை கொட்டிவந்துள்ளன.

பருத்தித்துறைப் பகுதிக்கான பாரிய குடி தண்ணீர்த்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பரிந்துரைக்கு அமைய அப்பகுதியில் குப்பை களைக் கொட்டக்கூடாது என பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் இரு சபை களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இருசபைகளும் அல் வாய், முள்ளி, சரசாலை வெளி ஆகிய இடங் களில் குப்பைகளை கொட்டிவந்தன. குறிப்பிட்ட இடங்களில் குப்பைகளைக் கொட்டவேண்டாம் என இருசபைகளுக்கும் விடுக்கப்பட்ட நெருக் கடியினால் அங்கெல்லாம் குப்பைகளைக் கொட்டமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குப்பைகளை கொட்ட இடமில்லாத நிலையில் நகர எல்லைக்குள் தேங்கும் குப்பைகளை அப் புறப்படுத்தும் நடவடிக்கையை பருத்தித்துறை நகரசபை மட்டுப்படுத்தியுள்ளது. இதனால் நகரின் சிற்சில பகுதிகளில் குப்பைகள் தேங்கியுள்ளன. இதனால் சுகாதாரச்சீர்கேடு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அதேவேளை பருத்தித்துறை பிரதேச சபை துன்னாலைப் பகுதியில் ஒதுக்குப்புறம் ஒன்றில் குப்பைகளைக் கொட்டிவருகிறது அதேநேரம், அப் பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதற்குரிய காணி ஒன்றைக் கொள்வனவு செய்யத் தீர்மானித் துள்ளது. (109)



# குலசேகர, மலிங்க ஆக்ரோஷ பந்துவீச்சு மீண்டும் சுருண்டது ஆஸி.




(பிறிஸ்போன்)

குலசேகர, மலிங்க ஆகியோரின் ஆக்ரோஷமான பந்து வீச்சின் மூலம் அவுஸ்ரேலிய அணி மீண்டும் சுருண்டது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று பிறிஸ்போனில் நடைபெற்றது.

இரண்டாவது போட்டியின் அடைந்த தோல்விக்குப் பழிதீர்க்கும் வகையில் அவுஸ்ரேலிய அணி பல மாற்றங்கள் செய்யப்பட்டது. அந்த வகையில் ஓய்வளிக்கப்பட்ட கப்டன் கிளார்க், வோனர், வைட் ஆகியோர் மீண்டும் அழைக்கப்பட்டு வெற்றிக்கான வியூகம் வகுக்கப்பட்டது. இந்த வகையில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய வோனர், ஹியூஸ் ஜோடி இலங்கை அணியை மிரட்டும் வகையில் களமிறங்கினர். எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி முதல் ஓவரை வீசிய மத்தியூஸ் அந்த ஓவரின் கடைசிப் பந்தில் வோனரை வெளியேற்றினார். நான்கு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆஸி. அணி முதலாவது விக்கெட்டை இழந்தது. இதனை சுதாகரித்து இலங்கை அணிக்கு ஆஸி. பெரும் நெருக்கடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், குலசேகர, மலிங்க ஆகியோரின் ஆக்ரோஷமான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின. ஒரு கட்டத்தில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஸ்ரார்க்குடன் மைக்கி இணைந்து, பத்தாவது விக்கெட்டுக்காக 34 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 26.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்ரேலிய அணியின் மூன்றாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகவும் இது அமைந்தது. இதற்கு முன்னர் இரண்டு முறை 70 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. துடுப்பாட்டத்தில் ஸ்ராக் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மைக்கி 15, கப்டன் கிளார்க் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் வெளியேற்றப்பட்டனர். பந்து வீச்சில் குலசேகர 22 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், மலிங்க 14 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியாகவே இருந்தது. ஆறு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. தொடர்ந்தும் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிக்கப்பட்டு வெற்றியைப் பெற அவுஸ்ரேலிய முனையும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் இணைந்த திரிமன்ன, டில்சான் இணை பொறுப்பாக ஆடியது. இந்த இணை 29 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை ஜோன்சனால் பிரிக்கப்பட்டதுடன் இலங்கை அணியின் மேலும் இரு விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டது. இந்நிலையில் ஆட்டம் சற்று பரபரப்பானது. இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டில்சான் 22, கௌசல் ஜசிந் பெரேரா ஆட்டமிழக்காது 22, தரங்க 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்சன் மூன்று, ஸ்ரார்க் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இலங்கை அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. போட்டியின் ஆட்டநாயகனாக குலசேகர தெரிவானார்.



# ஷரபோவா சாதனையுடன் கூடிய வெற்றி

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் 3ஆவது சுற்றிற்கு புதிய சாதனையுடன் முன்னேறியுள்ளார் மரியா ஷரபோவா.

உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்றுப் போட்டியில் [illegible] வீராங்கனை மிஸாக்கி டோயை 47 நிமிடங்களில் 6-0, 6-0 என்ற நேர் செட்களில் வென்றதையடுத்து இந்த புதிய சாதனையைப் படைத்தார். ஏற்கனவே நடந்து முடிந்த முதல் சுற்றுப் போட்டியில் ரஷ்யாவின் புஜ்கோவாவை 55 நிமிடங்களில் 6-0, 6-0 என்ற நேர் செட்களில் ஷரபோவா வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 2 சுற்றுகளிலும் எதிராளியை புள்ளிகள் சேர்க்கவிடாமல் 24 ஆட்டங்களையும் தன்வசப்படுத்தியிருப்பது ஷரபோவாவின் புதிய சாதனையாகும். இதேபோல 1985ஆம் ஆண்டு ஆடவர் பிரிவில் அவுஸ்ரேலிய வீரர் வெண்டி டர்ன்புல் இச்சாதனை படைத்திருந்தார். அதன்பின் 28 ஆண்டுகளுக்குப் பிறகு ரென்னில் உலகில் மகளிர் பிரிவில் ஷரபோவா இந்த சாதனையை முதல் முறையாக நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலகின் 4ஆம் நிலை வீராங் கனையான ரட்வன்ஸ்கா (போலந்து) நேற்றுக் காலை நடந்த 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இங்கிலாந்தை சேர்ந்த ஹெதர் வாட்சனை எதிர்கொண்டார். இதில் ரட்வன்ஸ்கா 6-3, 6-1 என்ற நேர்செட் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

இவானோவிக் 3ஆவது சுற்றில் 7-5, 6-3 என்ற நேர்செட் கணக்கில் சக நாட்டைச்சேர்ந்த ஜெலீனா ஜான்கோவிக்கை தோற கடித்தார்.

# காலிறுதியில் சாய்னா



(கோலாலம்பூர்)

மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்திய வீராங்கனை சாய்னா நேவல் முன்னேறினார்.

கோலாலம்பூரில், மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவல், ஹொங்கொங்கின புய் இன் இப்பை சந்தித்தார். அபாரமாக ஆடிய சாய்னா 21-12, 21-9 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார். காலிறுதி யில் செய்னா, ஜப்பான் வீராங்கனை நோஜோமி ஒகுஹராவை எதிர்கொள்கிறார்.

# ஹூப்பர் மறுப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகும் எண்ணம் எனக்கில்லை என மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் கார்ல் ஹூப்பர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த ரிச்சர்ட் பைபஸ் கடந்த அக்டோபர் மாதம் நீக்கப்பட்டார். இதையடுத்து புதிய பயிற்சியாளரை தேடும் வேட்டையில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஈடுபட்டுள்ளது. இந்த பொறுப்பை ஏற்க மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் கார்ல் ஹூப்பர் விருப்பம் தெரிவித்து இருப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் செய்தி தொடர்பாளர் ஜலால் யூனுஸ் கூறியிருந்தார்.

இந்த நிலையில் இதனை ஹூப்பர் மறுத்துள்ளார். பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராகும் எண்ணம் இல்லை. அந்த பதவிக்கு நான் விண்ணப்பிக்கவும் இல்லை. பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக விருப்பமா? என்று அவர்களது தரப்பில் என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் அது மாதிரி ஆசை இல்லை என்று கூறிவிட்டேன். இப்பொழுது இந்த செய்தி எப்படிதிரிவு படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க ஆச்சரியமளிக்கின்றது என்று ஹூப்பர் கூறியிருக்கிறார்.



# ஒலிம்பிக் பதக்கமும் பறிமுதல்

(லண்டன்)

ஒலிம்பிக் பதக்கத்தை ஒப்படைக்குமாறு ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கிய பிரபல சைக்கிள் பந்தய வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரொங்குக்கு சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் (ஐ.ஓ.சி.) கடிதம் எழுதியுள்ளது. 2000இல் சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆம்ஸ்ட்ரொங் வெண்கலப் பதக்கம் வென்றார். இந்த நிலையில் அவர் ஊக்கமருந்து உட்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து சர்வதேச சைக்கிள் பந்தய சம்மேளனம், ஆம்ஸ்ரொங்கின் சாதனைகளை தகுதி நீக்கம் செய்ததோடு, பிரபல சைக்கிள் பந்தயமான டூர் டி பிரான்ஸ் போட்டியில் அவர் வென்ற 7 பதக்கங்களையும் பறித்தது. அதை எதிர்த்து ஆம்ஸ்ரொங் மேல்முறைமீடு செய்வதற்கான காலக்கெடு முடிவடைந்தது. அதைத்தொடர்ந்து தற்போது பதக்கத்தை திரும்ப ஒப்படைக்குமாறு கடந்த புதன்கிழமை இரவு ஆம்ஸ்ரொங்குக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாக ஐ.ஓ.சி. அதிகாரிகள் தெரிவித்தனர். சமீபத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ஆம்ஸ்ரொங், தான் ஊக்கமருந்து உட்கொண்டதை ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெய்லரை நீக்கியமை தவறு

(டர்பன்)


அணியின் தலைமைப் பதவியிலிருந்து ரொஸ் டெய்லர் நீக்கப்பட்டமை தவறு என நியூஸிலாந்து அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளருமான ஷேன் பொன்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமப்படுத்திக்கொண்ட பின்னர் நியூஸிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து ரொஸ் டெய்லர் நீக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் தற்போது தென்னாபிரிக்காவில் அவ்வணி கிரிக்கெட் தொடரொன்றில் பங்குபற்றிவரும் நிலையில் நியூஸிலாந்து கிரிக்கெட் சபைக்கு ஷேன் பொன்ட் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே ரொஸ் டெய்லர் நீக்கப்பட்டமை குறித்து தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

ரொஸ் டெய்லர் பதவி நீக்கப்படும்போது அவருக்கு டெஸ்ட் அணித்தலைமை மாத்திரம் கிடைக்கப்பெறும் எனவும் ஒருநாள் சர்வதேசப் போட்டி, ருவென்ரி-20 அணித் தலைமை ஆகியவை வேறு ஒரு வீரருக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் ஆனால் அதை ரொஸ் டெய்லர் ஏற்றுக்கொள்ளாத நிலையில் மூன்று வகையான போட்டிகளின் அணித்தலைமையிலிருந்தும் டெய்லர் நீக்கப்படுவதாக நியூஸிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் மைக் ஹெசன் தெரிவித்திருந்தார். எனினும் பயிற்றுவிப்பாளர் மூன்று வகையான போட்டிகளின் அணித்தலைமையிலிருந்தும் ரொஸ் டெய்லரை நீக்க விரும்பியதாகவும் டெஸ்ட் போட்டிகளுக்கான தலைமைப் பதவியில் டெய்லர் தொடர்ந்தும் காணப்படுவார் என எப்போதும் தெரிவித்ததில்லை எனத் தெரிவித்துள்ள ஷேன் பொன்ட், அணித் தலைமை விவகாரத்தில் பயிற்றுவிப்பாளர் நேர்மையற்று நடந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# ஹரிகரன் சிறப்புப் பந்து வீச்சு

## யாழ். மத்திய கல்லூரி இனிங்ஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

ஹரிகரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கெதிரான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த 15,16ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி, யாழ். மத்திய கல்லூரி அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. அவ்வணியின் விக்கெட் சரிவை எந்தவொரு வீரராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 28 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதில் 44 பந்துகளை எதிர்கொண்ட விதுசன் 10 ஓட்டங்களைப் பெற்றார். ஐந்து வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் அலன்ராஜன் 1.4 ஓவர்கள் பந்து வீசி ஓட்டமெதுவும் கொடுக்காது மூன்று விக்கெட்டுக்களையும், டர்வின் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சௌமிதரன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி, யூலியஸ் கனிஷ்ரன், அலன்ராஜ், சண்சஜன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூலியஸ் கனிஷ்ரன் 55 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களையும், சண்சஜன் இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 29 ஓட்டங்களையும், அலன்ராஜ் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும், சௌமிதரன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கம்சிகன் 25 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், உதயா 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

172 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி, ஹரிகரனின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று, இனிங்ஸ் மற்றும் 76 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் தர்சன் 34 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும், கலைச்செல்வன், விதுன் தலா 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஹரிகரன் 14 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஒன்பது விக்கெட்டுக்களை கைப்பற்றினார். அண்மைய காலங்களில் ஒரு இனிங்ஸில் ஒன்பது விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் ஹரிகரன் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு இனிங்ஸிலும் பத்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஹரிகரன் யாழ். மத்திய கல்லூரியின் வெற்றிக்குத் துணைபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

# மாவட்ட கூடைப்பந்து

## அரையிறுதிக்கு அணிகள் தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். பற்றீசியன்ஸ், கொக்குவில் கே.சி.சி.சி. சென்றலைட்ஸ் சொக்ஸ், கோப்பாய் 'ஏ' அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன.

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் லீக் முறையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டியில், பற்றீசியன் அணிக்கும் முல்லைத்தீவு அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பற்றீசியன் அணி 64:42 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் கொக்குவில் கே.சி.சி.சி. 'ஏ' அணிக்கும் கொக்குவில் கே.சி.சி.சி. 'பி' அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. 'ஏ' அணி 44:27 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணிக்கும் ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 62:49 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் கோப்பாய் 'ஏ' அணிக்கும் சென்றலைட்ஸ் புளுஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் கோப்பாய் ஏ அணி 70:61 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தெரிவாகின.

இதேவேளை, இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும், போட்டித் தொடர் நாயகன், ஆட்டநாயகன் விருதுகளும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## வேலணையில் இன்று பிரதேச மட்ட கரப்பந்து

(வேலணை)

வேலணை பிரதேச பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வேலணை, துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடர், வேலணைப் பிரதேச விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக இடம்பெறவுள்ளதாகவும், பங்குபற்றும் அணிகளை குறித்த நேரத்திற்குள் வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்க்குமாறும் வேலணைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்தார். (93)

## 3 ஆவது ஒருநாள் இன்று

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் இந்தியாவின் ரஞ்சியில் இடம்பெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றிகளைப் பதிவாக்கியுள்ளன.

அந்த வகையில் தொடரில் முன்னிலை வகிக்கும் வகையில் இப்போட்டியை வெல்ல இரு அணிகளும் கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழமை போன்று மதியம் 12.00 மணிக்கு போட்டி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்தி



(கோப்பாய்)

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு வடமாகாண கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்தி அணி சம்பியனானது.

வடமாகாண கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடர் கடந்த 12ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பன்னாலை கணேசன், காங்கேசன்துறை ஐக்கியம், நீர்வேலி ஐக்கியம், ஆவரங்கால் இந்து, ஆவரங்கால் மத்தி, அரியாலை ஐக்கியம், அச்சுவேலி ஸ்ரார், புத்தூர் கலைமதி, ஆவரங்கால் இந்து இளைஞர் உட்பட பல அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இதன் அரையிறுதிப் போட்டிக்கு பன்னாலை கணேசன், ஆவரங்கால் இந்து இளைஞர், அச்சுவேலி ஸ்ரார், ஆவரங்கால் மத்தி அணிகள் தகுதிபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. இதில் முதல் செட்டை பன்னாலை கணேசன் அணி 25-21 என்ற செட் கணக்கில் வென்று ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு அதிர்ச்சி அளித்தது. இதனைத் தொடர்ந்து சுதாகரித்துக்கொண்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25-14, 25-21, 25-19 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்தி அணி 27-25, 25-20, 25-19 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் மோதின. இரு அணிகளும் அடிக்கடி ஒன்றை ஒன்று எதிர்கொள்ளுகின்ற அணி என்பதால் இரு அணிகளின் பலம், பலவீனம் இரு அணிகளும் நன்கு உணர்ந்திருந்தன. அத்துடன் இரசிகர்களிடையேயும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதற்கமைய பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது.

இறுதியில் 25-23, 25-20,25-23 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற ஆவரங்கால் மத்தி அணி, கிண்ணத்தை கைப்பற்றியது. இதேவேளை, நேற்றும், இன்றும் கொழும்பில் இடம்பெறுகின்ற தேசிய மட்டப் போட்டிகளில் ஆவரங்கால் மத்தி அணி பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 5

– ருவான் எம் ஜயதுங்க –



கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் சிறுவர் போராளிகள் ஆழமான உளவியல் பேரதிர்ச்சிகளை அனுபவித்து வருகிறார்கள் அது நேரடியாக அவர்களது மூளையின் ஆரோக்கியம் மற்றும் உளவியல் நலன்களை பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. இந்த சிறுவர்கள் ஒரு பாதிக்கப்பட்ட குழுவினர்கள் மற்றும் ஈழப்போரின் நீண்டகால பின் விளைவுகளால் ஏற்பட்ட பேரழிவுகளால் பாதிப்பு அடைந்துள்ளார்கள். இலங்கையில் இராணுவ மோதல்கள் 2009இல் முடிவடைந்து விட்டாலும்கூட இந்தச் சிறுவர்கள் இன்னமும் தங்கள் தனிப்பட்ட யுத்தங்களை நடத்திக் கொண்டே இருக்கிறார்கள். அநேகர் தங்கள் கடந்தகால போராட்டம் தொடர்பான பேரதிர்ச்சிகளிலிருந்து இன்னமும் விடுபடவில்லை.

கார்பரினோ மற்றும் கொஸ்ரெல்னி, (1993) அறிவுறுத்துவது, அரசியல் வன்முறை மற்றும் யுத்தம் தொடர்பான அனுபவங்கள், நன்றாக செயற்படும் குடும்பத்துக்கு தீவிரமான ஆபத்தை ஏற்படுத்தலாம். போர் எத்தனையோ குடும்பங்களைப் பிரித்துவிட்டது. அநேகமான சிறுவர் போராளிகள் தங்கள் பெற்றோரிடமிருந்து நீண்ட காலமாகப் பிரிக்கப்பட்டு விட்டார்கள், மற்றும் அநேகம் பேர்கள் குடும்ப சொந்தங்கள் என்கிற உணர்வையே இழந்து விட்டார்கள். அவர்களது குடும்ப உறவுகள் சிதைந்து போய்விட்டன. இந்த சிறுவர்கள் தங்கள் கலாச்சார, சமூக, மற்றும் தார்மீக அடையாளங்கள் என்பனவற்றை விட்டு விலகி வெகுதூரம் சென்று விட்டார்கள், மற்றும் அது உளவியல் நோய்களினால் அவர்களை பாதிப்படைய வைக்கிறது.

போர் பெரியவர்களை பாதிக்க வைக்கும் அதே அனைத்து வழிகளினாலும் சிறுவர்களையும் பாதிக்கிறது, ஆனால் சில வித்தியாசமான வழிகளினாலும் கூட அது அவர்களை பாதிப்புக்கு உள்ளாக்குகிறது (சான்ரா பார்பரா - 2006). போர் சிறுவர்களைப் பாதிப்பதோடு, அவர்களின் வாழ்க்கையில் நீண்டகால பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறது. வான் டெர் கொல்க் மற்றும் பலர் (1996 பி), பின்வரும் நீண்டகால அதிர்ச்சி விளைவுகளைப்பற்றி விளக்குகிறது:

1. பொதுவான உயர் உணர் வெழுச்சி மற்றும் உணர்வெழுச்சியை பண்படுத்துவதில் சிரமம்.
2. சுயமாகவும் மற்றவர்களுக்கு எதிராகவும் வலியத் தாக்குதல்களை மேற்கொள்ளல்
3. சமூக இணைப்புகளில் பிரச்சினைகள் - அளவுக்குமீறிய சார்பு அல்லது தனிமை
4. நரம்புயிரியல் நடைமுறைகளில் ஊக்கப் பாகுபாடு தொடர்பான மாற்றங்கள்
5. கவனம் செலுத்துதல் மற்றும் கிரகித்தல் என்பனவற்றில் பிரச்சினைகள்
6. தொடர்பற்ற நிலை
7. இல்லாத நோய்களின் அறிகுறிகளைக் கற்பனை செய்யும் மனோநிலை
8. அதிர்ச்சி தொடர்பான தூண்டல்களுக்கு பதிலாக கட்டுப்பாடான பயம்
9. விசுவாசம், நம்பிக்கை இழப்பு மற்றும் தனிப்பட்ட முகவர் போன்ற உணர்வு
10. சமூகத்தை தவிர்த்தல்
11. அர்த்தமுள்ள தொடர்புகளின் இழப்பு
12. எதிர்காலத்தை தயார் செய்வதில் பங்குபற்றாமலிருத்தல்

எண்ணற்ற ஆராய்ச்சிகள் தெரிவித்திருப்பது, அதிர்ச்சியின் பின்னான மன அழுத்த நோயின் பாதிப்புக்கு (பி.எஸ்.ரி.டி) ஆளாகும் உயர் ஆபத்துக்கு சிறுவர் போராளிகள் ஆளாகி உள்ளனர் என்று. ஒக்கேலோ, ஒனென் மற்றும் மியுசிசிவ் ஆய்வு (2007) கண்டிருப்பது 27 - 34.9 விகிதமான உகண்டா நாட்டு சிறுவர்



போராளிகள் பி.எஸ்.ரி.டி. யின் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார்கள் என்று. கோஹர்ட் மற்றும் பலரின் ஆய்வின்படி (2011), நேபாளிச் சிறுவர் போராளிகளில் 75 பேர் (52.3 விகிதம்) மன அழுத்தம் தொடர்பான நோய்க்கான அறிகுறிகளை கொண்டிருந்தனர், 65 பேர் (46.1 விகிதம்) பதட்டம் தொடர்பான நோய் அறிகுறிகளையும், 78 பேர் (55.3 விகிதம்) பி.எஸ்.ரி.டிக்கான அறிகுறிகளையும் 55 பேர் (39 விகிதம்) பொதுவான மன உளைச்சல் சிரமங்களையும் மற்றும் 88பேர் (62.4 விகிதம்) பலவீனமான செயல்பாடுகளுக்கான அறிகுறிகளையும் கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கிறது. இலங்கையில் டி சில்வா மற்றும் பலரினால் (2001) மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு வெளிப்படுத்துவது, இராணுவத்துக்கு கட்டாயமாக சேர்க்கப்பட்ட சிறுவர்கள், கட்டாயமாக படையில் இணைக்கப்பட்ட வளர்ந்தவர்களைக் காட்டிலும் உயர் விகிதங்களிலான பி.எஸ்.ரி.டி யினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று.

(தொடரும்)

# கொய்யா செய்திகள்!



- பழுத்த கொய்யாப்பழத்துடன் மிளகு மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து சாப்பிட்டு வந்தால், உடல் சோர்வு மற்றும் பித்தம் நீங்கும்.
- கொய்யாப்பழத்துடன் சப்போட்டா பழத்தைச் சேர்த்து, அதில் தேன் கலந்து சாப்பிட்டால், உடல் வலுப்பெறும். இரத்தம் சுத்தமாகும்.
- மதிய உணவிற்குப் பின் கொய்யாப்பழம் சாப்பிட்டால், உடல் வலுப்பெறுவதோடு இரத்தமும் சுத்தமாகும். சமிபாடு எளிதாகும். மலச்சிக்கல் அறவே நீங்கும். வயிற்றுப் புண் குணமாகும்.
- இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியும், மூட்டு வலி, மூல நோய், சிறுநீரகக் கோளாறு உட்பட பல நோய்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் உண்டு.
- கொய்யா இலைகளைச் சந்தனத்துடன் சேர்த்து அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் கடுமையான தலைவலி, மற்றும் ஒற்றைத் தலைவலி நீங்கும்.
- கொய்யாப்பழத்தில் அமிலத்தன்மை அதிகமிருப்பதால் வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது.

# ஹிட்லரைக் கவர்ந்த நாடு



இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஜேர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரிடம் அவரது நண்பர்கள் சுவிஸ் நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு ஹிட்லர், "வேண்டாம். சுவிட்சர்லாந்து ஓர் அழகான நாடு. நாம் ஆசைப்பட்டு இப்போதே அதை அழித்துவிட்டால் பிறகு எதிரிகளிடம் ஒன்றாக அமர்ந்து பேச நடுநிலை நாடு என்பது இல்லாமல் போய்விடும். மேலும் உங்களைப் போன்ற உயர் இராணுவ அதிகாரிகள் ஓய்வு கொள்ள விரும்பினால், போரில்லாத நாடு என்று ஒன்று வேண்டுமல்லவா? ஆகவே சுவிட்சர்லாந்தைத் தொடக்கூடாது" என்று கூறினாராம்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு "இந்து" ராம் புத்திமதி!

"இலங்கையில் இன்று பதவியில் இருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் போன்ற ஒரு பலம் வாய்ந்த அரசாங்கம் இதற்கு முதல் இருந்தது இல்லை. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு பூரண ஆதரவு வழங்குவதின் மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்வைக் காண்பதற்கு உதவ வேண்டும்"



இவ்வாறு கூறியிருக்கிறார் இந்தியாவின் பிரபலமான "த இந்து" ஆங்கில நாளிதழின் முன்னாள் ஆசிரியரும், உலகின் பிரசித்தி பெற்ற பத்திரிகையாளர்களில் ஒருவருமான என்.ராம்.

இந்தியாவிலுள்ள ஆசிய பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி நிலையத்துக்கு விஜயம் செய்த இலங்கைப் பத்திரிகையாளர்கள் குழுவொன்றுடனான உரையாடலின் போதே, திரு.ராம் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் அங்கு கூறுகையில், "கம்போடியாவின் பொல்பொட் குழுவினரின் பாணியில் புலிகள் செயற்பட்ட போது, இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதுவும் கூறாது மௌனம் சாதித்து வந்ததுடன், புலிகள் சொன்னதையே செய்தும் வந்தனர்.

1991இல் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் கொலை செய்ததின் மூலம் அவர்களுக்கு இந்தியாவில் இருந்து வந்த ஆதரவையும் அனுதாபத்தையும் முற்றாக இழந்தனர். இந்திய மக்கள் அவர்களை விட்டுத் தூர விலகிக் கொண்டனர்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என அண்மையில் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். இது அரசியல் உள்நோக்கத்துடனான ஒரு அறிக்கையாகும். இந்த அறிக்கையை தமிழ் நாட்டிலுள்ள புத்திசாலித்தனமான எந்த அரசியல்வாதியும் கணக்கில் எடுக்கமாட்டார்கள். இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் எதிரிகள் புலம்பெயர் தமிழ்த் தலைவர்களே" என்றும் ராம் குறிப்பிட்டார்.

- நன்றி: வானவில் 24




# கங்னம் ஸ்ரைல்

கடந்த ஆண்டு கடந்த மாதம் 21 ஆம் திகதி உலகம் அழிகிறது என்று ஒரு கோஷ்டி பீதியைக் கிளப்பிக் கொண்டிருந்தது. இதனால் அவசரக் கல்யாணங் கள், அவசர காதல்கள், அவசர கடன்கள், அவசர கொள்வனவு கள், அவசர விபத்துக்கள் என்று நிறையவே உலகம் முழுக்க அவசரமாக நடந்தன.

இன்ரநெற்றில் உலாவினால் இவை பற்றிய தகவல்கள் ஏராளம். ஆயினும் தென்கொரியா வில் PSY என்று அழைக்கப் படும் பாடகர் சைக்கிள் Gap இனுள் Auto ஓடினார்.

அவரது (Sexy Girl) என பொருள் படும் ஒரு பாடல் கங்னம் ஸ்ரைல் (Gangnam Style) என்ற அவரது ஆடலுடன் உலகம் முழுவதுமாக ஒரு மெகா கவனிப்பை பெற்றது.

அந்தநேரம் கிளப்பப்பட்ட வதந்தி இது தான். உலகம் அழிவடையச் சில நிமிடங்களுக்கு முன்னர் மூன்று குதிரை வீரர்கள் வருவார்கள். அவர்கள் இந்த கங்னம் ஸ்ரைலில் ஒரு ஆட்டம் ஆடிமுடிய உலகம் அழியும் என்பதே அந்தச் செய்தி. அவ்வளவுதான்... காட்டுத்தீயாக இந்தச் செய்தி உலகம் முழுவதும் பரவி இன்றுவரை சுமார் 20 கோடிப்பேர் யூரியூப் (Youtube) என்ற இணையதளத்தில் அந்த வீடி- யோ வைப் பார்த்துத் தள்ளினார்கள்.

பாடகர் PSY இற்கோ ஏராளமான பாராட்டுக்கள், நிகழ்ச்சிகளுக்கான அழைப்புகள், புகழ், செல்வம் எல்லாம் குவிந்தன. அடடா, உலகம் அழிவில் ஒருத்தனுக்கு இப்படி ஒரு வாழ்வா... என்று எல்லாரும் பொறாமைப்பட்டார்கள்.

போதாக்குறைக்கு கங்னம் சைனா ஸ்ரைல், கங்னம் ஹொங்கொங் ஸ்ரைல், கங்னம் பிரெஞ் ஸ்ரைல் என்று காசைக்கொட்டி Shoot பண்ணி இணையத்தில் உலவ விட்டார்கள்.

நம்மவர்கள் விடுவார்களா...? அந்த கொரியன் பாடலை அப்படியே தமிழுக்கு மாற்றி "லங்கன் ஸ்ரைல்" (Lankan Style) என்று கொஞ்ச நாட்கள் வானொலிகள் அலறின.

நடிகர் தனுஷின் கொலவெறிப் பாடலும் இவ்வாறு தான் மெல்ல மெல்ல இணையத்தில் பார்க்கப்பட்டு டக்கென்று உலகம் பூராவும் பற்றிக் கொண்டது.

அதனை விடவும் கங்கனம் ஸ்ரைல் ஏகோபித்த வரவேற்பை பெற்றதுக்கான காரணம் அதில் இருந்த த்ரீ இன் வன் தான். அதாவது பாடல், ஆடல், உலக அழிவு என்பன சேர்ந்து அப்பாடலை சூப்பர் டூப்பர் ஹிட் ஆக்கின.

அது சரி... அப்படி என்ன தான் அப்பாடலில் இருக்கிறது என்றால் PSY இன் ஒரு இலகுவான தனித்துவமான குதிரை ஓடுவது மாதிரியான ஒரு Simple beat இற்கு ஏற்ற மாதிரி யான ஒரு ஆட்டம் தான்.

ஆங்கிலத்தில் capturing the opportunity என்பார்கள் அதைப்போன்று PSY யும் உலகம் அழிவு என்பதை தனது நடனத்துடன் கலந்து வெற்றி பெற்றார் என்றே சொல்ல வேண்டும்.

தென்கொரியக் குழந்தை குட்டி, குஞ்சு குருமன், கிழடு கட்டை எல்லோருக்கும் கங்னம் பாடலும் ஆடலும் தண்ணி பட்ட பாடு...

இன்னும் இப்பாடலைக் காணாத நம்மவர்கள் www.Youtube.com Ngha; PSY அல்லது Gangnam Style என்று தேடுங்கள்... கவனம்...! போலி கள் உண்டு ஏமாறாதீர்கள்...!!







# ஒடுகளற்ற நத்தை!

ஸ்லக் எனப்படும் உயிரி- னம் ஓடுகளற்ற நத்தை இன வகையைச் சேர்ந்தது. இதற்கு சுத்தமாக காது கேட்காது. இரண்டு ஜோடி உணர்வுக் கொம்புகளைக் கொண்டவை. தலையின் மேலுள்ள இந்த உணர்வுக்கொம்புகள் வெளிச்சத்தை உணர்வதற்கும் வாசனையை உணர்வதற்கும் பயன்படுகின்றன. இந்தக் கொம்புகள் அறுந்து விழுந்தாலும் மீண்டும் வளரும் தன்மை உடையவை. இவை 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியவை என்று அறிவியலாளர்கள் கருதுகிறார்கள்.

- நில நடுக்கம் ஏற்படுவதற்கு பல நாள்களுக்கு முன்னதாகவே எறும்புகள் சாரை சாரையாகச் சென்று உணவை சேமித்து வைக்கும்.
- வளை தோண்டி பொந்துகளில் வசிக்கும் எலி, மூஞ்சூறு, பாம்பு, தவளை போன்ற விலங்குகள் வளையை விட்டு வெளி- யேறிவிடும்.
- மீன்கள் தண்ணீரின் மேல் மட்டத்துக்கு வந்து கண்டபடி ஓடும் எகிறிக் குதிக்கும்.
- மூஞ்சூறுகள் மது அருந்தியதைப் போன்று தள்ளாடும், வலிப்பு வந்ததைப் போல உடலை முறுக்கிக் கொள்ளும்.
- பன்றிகள் அலையும், அடுத்த பன்றிகளின் வாலைக் கடிக்கும்.
- பூனைகள் குறுக்கு நெடுக்காக ஓடும்.
- நாய்கள் இருப்புக் கொள்ளாமல் ஊளையிடும். தரையை பரபரப்பாக சுரண்டும். ஓர் இடத்தில் நிற்காமல் முன்னும் பின்னுமாகத் திரியும். பழகியவர்களைப் பார்த்ததும் ஓடிவந்து ஒட்டிக்கொண்டு நகராமல் முரண்டு பிடிக்கும்.

(அன்டி மைக்கேல் என்ற மிருக ஆராய்ச்சியாளர் கூறுகிறார்)



## பூகம்பம் வருவதற்கு முன்

- யுவகிருஷ்ணா -

# ஜென்னீ



"நீதானே என் பொன்வசந்தம்" படத்தில் சமந்தாவின் பேரழகையும், அபாரமான நடிப்பையும் பலரும் விதந்தோதுகிறார்கள். காட்டாறாய் அடிக்கும் சமந்தா மணலில் அடித்துப்போன சந்தனமரங்களில் ஒருவர் வித்யூலேகா. பவுர்ணமியின் போது நட்சத்திரங்கள் ஒளிமங்கி தெரிவது இயல்புதான்.

சமந்தாவுக்கு தோழியாய் தொடக்கத்தில் ஸ்கூல் யூனிபோர்மில், கல்லூரியில், பிற்பாடு படத்தின் இறுதிக்காட்சி வரைக்கும் இரண்டாம் நாயகியாய் கலக்கிய ஜென்னீ இவர்தான். நாடக நடிகையான வித்யூவுக்கு இதுதான் முதல் படம்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு அடையாரில் ராமச்சந்திரன் என்றொரு நடிகர் வசித்து வந்தார். அவரது அம்மாவுக்கு உடல்நலமில்லாமல் அடிக்கடி மருத்துவமனைக்கு ராயப்பேட்டை வரவேண்டி இருந்தது. அந்த காலத்தில் அடையாருக்கும், ராயப்பேட்டைக்குமான பயணமே கூட நெடும்பயணம்தான். ஜட்கா வண்டி அல்லது ரிக்ஷாவில் வரவேண்டும். உடல்நலம் குன்றியிருந்த அம்மா அலைக்கழிக்கப்படுவதை விரும்பாமல் ராயப்பேட்டையிலேயே அவருக்கு வசதியாக ஒரு வீடு வாடகைக்கு தேடினார் ராமச்சந்திரன்.

லாய்ட்ஸ் சாலையில் - இப்போதைய அதிமுக தலைமை அலுவலகத்துக்கு அருகில் - ஏ.வி.ராமன் என்பவருக்கு சொந்தமான ஒரு வீடு இருந்தது. இவர் ராஜாஜியின் நெருங்கிய நண்பர். இவரது வீடு ராமச்சந்திரனுக்கு மிகவும் பிடித்துப் போனது. ஆனால் சினிமாக்காரர் என்பதால் வீடு தர ஏ.வி.ராமன் மறுத்துவிட்டார். காங்கிரஸ்காரரான ராமச்சந்திரன் ராஜாஜியிடம் சிபாரிசுக்கு சென்றார். "சினிமாக்காரராக இருந்தாலும் சொக்கத்தங்கம்" என்று ராஜாஜி சான்றிதழ் கொடுக்க, ராமச்சந்திரனுக்கு வீடு கிடைத்தது.

இதற்கிடையே ராமச்சந்திரன் சினிமாவில் வளர்ந்து எம்.ஜி.ஆர் ஆகிவிட்டார். ஆனாலும் அதே வீட்டில் வாடகைக்கு அண்ணன் குடும்பத்தோடு கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார். எம்.ஜி.ஆரின் முதல் மனைவி சதானந்தவதி அம்மையார் இந்த வீட்டில்தான் காலமானார். எம்.ஜி.ஆரின் அன்னை சத்யாவும் இங்கேதான் இயற்கையோடு இணைந்தார்.

வீட்டு உரிமையாளர் ஏ.வி. ராமனின் மகனான வழக்கறிஞர் வி.பி.ராமன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிரமாக இயங்கிவந்தார். பிற்பாடு ஈ.வி. கே.சம்பத்தோடு தமிழ் தேசியக்கட்சி கண்டவர்களில் இவரும் ஒருவர். எம்.ஜி.ஆரும் இப்போது திமுக என்பதால் இருவரும் நெருங்கிய நண்பர்களாக ஆனார்கள். தன் தாய் வாழ்ந்த வீடு என்பதால் அந்த வீட்டை விலைக்கு வாங்க எம்.ஜி.ஆர். விரும்பினார். வி.பி. ராமனும் பெருந்தன்மையோடு மிகக்குறைந்த விலைக்கு வீட்டை எம்.ஜி.ஆருக்கு எழுதித் தந்தார்.

எம்.ஜி.ஆர் ஆசையோடு அந்த வீட்டுக்கு "தாய்வீடு" என்று பெயரிட்டார். அவரது சக தொழில் போட்டியாளரான சிவாஜியின் போக் ரோட் வீட்டுக்கு "அன்னை இல்லம்" என்பது பெயர். இந்த தாய்வீட்டில்தான் பிரசித்தி பெற்ற எம்.ஜி.ஆர் நாடக மன்றத்தின் பொங்கல் விழா நடைபெறும். பிறப்பால் மலையாளி என்று சொல்லப்பட்டாலும் எம்.ஜி.ஆர் உயிரோடு இருந்தவரை கொண்டாடிய பண்டிகைகள் பொங்கலும், தமிழ்ப்புத்தாண்டும் மட்டும்தான். பொங்கல் விழாவின் போது எம்.ஜி.ஆருடைய ஸ்டண்ட் கோஷ்டியினர் நாடகம் போடுவார்கள். எம்.ஜி.ஆரது படங்களில் கொடூரமான வில்லன்களாக தோன்றும் அவர்கள் அன்று "நல்ல" கதாபாத்திரங்களில் உருக வைப்பார்கள். குழந்தைகளின் கலைநிகழ்ச்சி நடக்கும். அன்று தாய்வீட்டுக்கு வருகை தருபவர்களுக்கு கைக்கு கிடைத்ததை எல்லாம் அள்ளி அள்ளி கொடுப்பார் எம்.ஜி.ஆர். தாய்வீட்டு பொங்கல் விழாவுக்கு அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்ததுண்டு.

நியாயமாகப் பார்க்கப் போனால் எம்.ஜி.ஆரின் மனதுக்கு மிகவும் நெருக்கமான அந்த "தாய்வீடு"தான் அவரது நினைவு இல்லம் ஆகியிருக்க வேண்டும். இப்போது அந்த வீடு யாருடைய ஆளுகையில் இருக்கிறதோ தெரியவில்லை.




எம்.ஜி.ஆர் முதல்வர் ஆனதுமே நன்றி மறவா- மல் வி.பி.ராமனை தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் ஆக்கினார். அவருக்கு இரண்டு மகன்கள். இளையவர் பி.எஸ். ராமன். இவரும் 2006இல் தமிழக அரசின் அட்வகேட் ஜெனரலாக பதவியேற்றார்.

மூத்தவர் மோகன்ராம். நாம் அடிக்கடி சினிமாக்களில் பார்க்கும் அதே மோகன்ராம்தான். சினிமா, டிவி நாடகங்களின் படப்பிடிப்புக்கு தன் வீட்டை தந்துவந்த இவரும் தற்செயலாக நடிகர் ஆனதாக சொல்வார்கள். படங்களில் சிறிய பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருந்தவரை "மர்மதேசம்" தொலைக்காட்சித் தொடர் பட்டிதொட்டியெல்லாம் பிரபல்மாக்கியது.

தாய்வீட்டின் நிஜவாரிசான மோகன்ராமின் வாரிசுதான் ஜென்னீ.

# புதிர்ப்போட்டி 28

நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## பொது அறிவுத் துணுக்குகள்


1) மனித வெடிகுண்டால் கொல்லப்பட்ட இலங்கைப் பிரதமர் யார்?
2) இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதி யார்? அவர் எப்போது பதவி ஏற்றார்?
3) கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் எப்போது இணைந்து கொண்டன?
4) “திவேகி” என்ற பாஷையைப் பேசும் மக்கள் வாழும் நாடு எது?
5) இலங்கையில் மிகக் குறைவான மழை பெறும் இடம் எது?

## கணக்குப் புதிர்

| | | |
|---|---|---|
| B | 88 | 102 |
| 150 | 133 | C |
| 63 | 52 | 42 |
| D | 187 | 207 |
| 18 | A | 33 |
| 273 | 250 | E |
| 12 | 7 | 3 |

1) A ..................
2) B ..................
3) C ..................
4) D ..................
5) E ..................

## சிந்தனைக்கு விருந்து



படத்தில் காட்டப்பட்டுள்ள மரக் குற்றியின் நான்கு பக்கங்களிலும் (ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய) சிவப்பு வர்ணமும், எதிர்ப்பக்கங்கள் இரண்டுக்கும் கறுப்பு வர்ணமும் (மேலும், கீழும்) பூசப் பட்டுள்ளது. புள்ளிக் கோடுகள் அம்மரக்குற்றி ஒரே அளவாக வெட்டப்பட்டுள்ளதைக் குறிக்கும் (4x2) படத்தை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1) எத்தனை சிறிய கனத்துண்டுகள் உருவாக்கப்பட்டுள்ளன. (..............)

2) ஒரு பக்கம் மாத்திரம் கறுப்பு நிறம் பூசப்பட்டுள்ள கனத்துண்டுகள் எவ்வளவு? (..............)

3) எந்த ஒரு பக்கத்திலும் நிறம் தீட்டப்படாத துண்டுகள் எவ்வளவு? (..............)

4) ஒரு பக்கம் மாத்திரம் சிவப்பு நிறம் பூசப்பட்ட துண்டுகளின் அளவு என்ன? (..............)

5) மூன்று பக்கங்கள் நிறம் பூசப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை யாது? (..............)

## புதிர்ப்போட்டி 26 இல் வெற்றியீட்டியோர் விபரம்



பெயர்: நா.லோகிஜன்
பாடசாலை:
யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்.



பெயர்: த.மதுஷா
பாடசாலை:
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



பெயர்: கி.டிசாயினி
பாடசாலை:
யா /சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



பெயர்:
கி.கயறூபி
பாடசாலை:
யா/சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்:
க.அபிராமி
பாடசாலை:
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## புதிர்ப்போட்டி 26 இற்கான சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

| | | | |
|---|---|---|---|
| பெயர்: ஜெ.துவாணி<br>பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.. | பெயர்: த.யுவந்தன்<br>பாடசாலை: கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம். | பெயர்: இ.பிரியதர்சினி<br>பாடசாலை: யா/ உடுவில் மகளிர் கல்லூரி. | பெயர்: அ.ஒனால்ட்குருஸ்<br>பாடசாலை: மன்/ புனித வளனார் றோ.க.த.வித்தி. |
| பெயர்: எ.ஜோர்ஜ் டென்சி<br>பாடசாலை: கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம். | பெயர்: இ. தமிழினி<br>பாடசாலை: யா/ மானிப்பாய் விவேகானந்தாக் கல்லூரி. | பெயர்: ர.மேருஜா<br>பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. | பெயர்: மெ.இங்கிதை<br>பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை. |

பெயர்: க.தினேஸ்
பாடசாலை: யா/ ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.

பெயர்: வி.யதுர்வினா
பாடசாலை: கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்

**தினமுரசின் புதிர்ப்போட்டியில் நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்**

## புதிர்ப்போட்டி 26 இற்கான விடைகள்

**1**
1) நாகமரம்
2) கரப்பந்தாட்டம்
3) நீலோற்பலம்
4) காட்டுக்கோழி
5) மரநாய்

**2**
1) விசைப்பலகை
2) சிகிரியா
3) சுருங்கை
4) கிக்கடுவ
5) டொனமூர்

**3**
1) சமாதானம்
2) அமைதி
3) வளர்ச்சி
4) தொற்றுநோய்
5) துக்கம்

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..................................

பாடசாலையின் பெயர் ..................................

தரம் :- :-..................................

தொலைபேசி இல.:-..................................

முகவரி :-..................................

..................................


### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

புதிர்ப்போட்டி 28 இற்கான விடைகளை எதிர்வரும் பெப்ரவரி 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.


### அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



அச்சுவேலி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணி வகுப்பு மரியாதை அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மரியாதை செலுத்துவதையும் யாழ். பொலிஸ் அத்தியட்சகர் எரிக்பெரேரா மரியாதையை ஏற்றுக்கொள்வதையும் காணலாம். (படங்கள் - கபிலன் 15)

# இந்திய அரசாங்கத்தால் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தால் கொழும்பு உயர்ஸ்தானிகராலயம் மற்றும் யாழ். இந்திய துணைத்தூதரகம் மூலமாக இலங்கை மாணவர்களுக்கு பல்வேறு புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளதாக யாழ். இந்திய துணைத்தூதரக தூதுவர் மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இதன்படி துணைத்தூதரகத்தால் புலமைப்பரிசில் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கை மாணவர்களுக்கு ஐ.சி.சி. ஆர் (ICCR) புலமைப்பரிசில் மற்றும் ஏனைய புலமைப்பரிசில்கள் என இருவகையான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஐ.சி.சி.ஆர் புலமைப்பரிசில் இந்தியாவில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில்களான நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தில் 100 வாய்ப்பிடங்கள்: மருத்துவம், தவிர்ந்த பொறியியல் விஞ்ஞானம், வணிகம், பொருளியல் வர்த்தகம், மானிடலியல் மற்றும் கலை ஆகிய துறைகளுக்கு இளமாணிப் பட்டப்படிப்புக்கானது. அடுத்து மௌலானா ஆசாட் புலமைப்பரிசில் திட்டத்தில் 50 வாய்ப்பிடங்கள் பொறியியல் விஞ்ஞானம், பொருளியல், வர்த்தகம், மானிடலியில் மற்றும் கலை ஆகிய துறைகளுக்கான முதுமாணி பட்டப்படிப்புக்கானது எவ்வாறாயினும் பொறியியல், விஞ்ஞானம். விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மருத்துவ பாடநெறி இதில் உள்ளடக்கப்படவில்லை.

மேலும் ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டத்தில் 25 வாய்ப்பிடங்கள்: B.E,B.Tech ஆகிய பட்டங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய வகையில் தகவல் தொழில்நுட்பத்துறைக்கான இளமாணிப் பட்டப்படிப்புக்கானது.

இதில் நேரு ஞாபகார்த்த திட்டத்திற்கும் ராஜீவ்காந்தி புலமைப்பரிசில் திட்டத்திற்கும் விண்ணப்பிக்கும் இறுதித் திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி எனவும் மௌலானா ஆசாட் புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் இறுதித்திகதி எதிர்வரும் பெப்ரவரிமாதம் 20ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏனைய புலமைப்பரிசில்களான முதுமாணி கலாநிதி பட்டப் படிப்பிற்கான பொதுநலவாய புலமைப் பரிசில் திட்டம், (மருத்துவம் தவிர்ந்த அனைத்து பாடங்கள் உள்ளடங்கலாக 5 வெற்றிடங்கள், முதுமாணி கலாநிதி பட்டப்படிப்பிற்கான சார்க் புலமைப் பரிசில் திட்டம், (மருத்துவம் தவிர்ந்த அனைத்துபாடங்கள் உள்ளடங்கலாக 2 வெற்றிடங்கள்) முதுமாணிப்பட்டப் படிப்பிற்கான IOR/ARC புலமைப்பரிசில் திட்டம், (சுதேச வைத்தியத்துறை உட்பட அனைத்து கற்கைத்துறைகள் MBBS / மருத்துவம் உள்ளடக்கப்படவில்லை 2 வெற்றிடங்கள்) ஆகிய 3 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்குரிய இறுதித்திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் திட்டத்திற்குரிய கல்வித் தகைமைகள் விண்ணப்பிக்கும் முறைகள் உள்ளிட்ட இதர தகவல்கள் நாளை தினமுரசில் வெளியாகும்.(பா)

# கும்பாபிஷேகம்

(தும்பளை)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 4.47 மணி தொடக்கம். காலை 6.30மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 6-4 மணி வரை யந்திரபூசை விசேட வழிபாடு, நடைபெறவுள்ளதுடன் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (62)

# வள்ளுவர்புரம் கிராமத்தில் கசிப்பு நடவடிக்கை அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வள்ளுவர்புரம் கிராமத்தில் சட்டவிரோதமான கசிப்பு நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுவதாக பலராலும் தெரிவிக்கப்படுகிறது.இவ்வாறான சட்டவிரோத கசிப்பு நடவடிக்கைகளால் சிறுவர்கள்,பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் இதனால் குடும்ப வன்முறைகள்,சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பனவும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி, விற்பனை போன்றன இடம்பெறுவதை தடுக்க இக்கிராமத்திலுள்ள சிவில் பாதுகாப்புக்குழுக்கள். பொது அமைப்புக்கள் இவ்வாறு சட்டவிரோத கசிப்பு நடவடிக்கை களில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதன் மூலம் குற்றச்செயல்கள் இடம் பெறுவது தடுக்க முடியும் என பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதை தடுக்கும் வகையில் பொலிஸாரும் சிவில் பாதுகாப்பு குழுவினரும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (04)

# பாடசாலையின் குறைபாடுகளை தீர்க்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி நாச்சிக்குடா பாடசாலையின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பெற்றோர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதாவது இப்பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறை, தளபாடப் பற்றாக்குறை வளப் பற்றாக்குறை என்பனவற்றுடன் மாணவர்கள் பெரும் நெருக்கடியின் மத்தியில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இக்குறைபாடுகளை நிவர்த்திசெய்யுமாறு பல தடவை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் அதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் இதனை அடுத்தே தாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகப் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு பற்றாக்குறைகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்யுமாறு கோரிப் பெற்றோர்கள் வலயக்கல்வித் திணைக்களத்திடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (கே)

# குற்றச்செயல்களை தடுத்து நிறுத்த பொலிஸார் விசேட நடவடிக்கை

(வடமராட்சி)


பருத்தித்துறை நகரமையப்பகுதியில் திட்டமிட்டு நடைபெறும் ஒருசிலரின் அநாகரிக செயற்பாடுகளை கண்காணித்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கென சிவில் உடை தரித்த புலனாய்வுத்துறை பொலிஸார் கடமையிலிடுபடுத்தப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எஸ். பிரித்தவுஸ் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

பருத்தித்துறை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை நகர மையப்பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் பொருட்டு மதுப்பிரியர்களின் கண்மூடித்தனமான செயற்பாடு, இளம் பெண்கள் மீதான வன்முறை, சந்தேகத்துக் இடமானவர்களின் நடமாட்டம், வீதி நடைமுறைகளை மீறிய போக்குவரத்து திருட்டுச் சம்பவங்கள் போன்ற குற்றச்செயல்கள் அண்மைக காலமாக நடைபெற்றுவருவதாக பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நிலையில் இக் குற்றச்செயல்களை கண்காணிக்கவே சிவில் உடைதரித்து மக்களோடு மக்களாக புலனாய்வுத்துறை பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இவ்வாறான குற்றச்செயல்களை செய்வோர் மீது உடன் சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் பருத்தித்துறை பொலிஸாரினால் விசேட திட்டம் ஒன்று நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சுமார் 400 ஆட்டோக்களுக்கு பதிவுகளை மேற்கொண்டு இலக்கம், பொலிஸ்பிரிவு மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றன தமிழிலும் சிங்களத்திலும் ஆட்டோவின் பின் புறத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

பல்வேறுபட்ட சட்ட விதிமுறைகளுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் நகர ஆட்டோ தரிப்பிடத்திலும் நின்று ஆட்டோ சங்கத்தின் உறுப்பினர் அல்லாத ஒருசிலரின் அநாகரிக செயற்பாட்டினால் தமது தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆட்டோ சாரதிகளால் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. எனினும் அவ்வாறானவர்களையும் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும் இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (116)



முல்லைத்தீவு வெலிஓயா பிரதேசத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி உள்ளிட்ட பிரதிநிதிகள் அண்மையில் விஜயம் மேற்கொண்டனர் இதன்போது பிரதிநிதிகள் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கிவைப்பதைக் காணலாம். (படம்: கே.நந்தகுமார்)

# வடமாகாண கல்வி அபிவிருத்திக்கு பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு



(கொழும்பு)

வடமாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படும் ஆசிரிய வளங்களை ஏனைய பாடசாலைகளுடன் பகிர்ந்துகொள்ள வடமாகாண ஆளுநருக்கு கல்வி அமைச்சர் விசேட அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஆசிரியர்களைப் பகிர்ந்தளித்தல் முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்பிரகாரம் வடபகுதி தேசிய பாடசாலைகளிலிருந்து மாகாண பாடசாலைகளுக்கும், மாகாண பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கும் ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளனர். ஆளுநருக்கு கல்வி அமைச்சர் வழங்கியுள்ள இவ் அனுமதியின் பிரகாரம் பாடசாலை மட்டத்திலும், பாடவிதானத்தின் அடிப்படையிலும் மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களின் வளப்பயன் பாடானது சமநிலைப்படுத்தப் படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் உடற்கல்வி ஆசிரிய வெற்றிடங்களை உடற்கல்வி டிப்ளோமாதாரிகளைக் கொண்டு நிரப்ப அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.


இதன்பிரகாரம் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் டிப்ளோமாதாரிகளை இணைத்துக் கொள்வதென்றும் அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடனும் அதற்கு மேலதிகமாக தேசிய கற்கை நிறுவகத்தில் ஒருவருட மேலதிக பயிற்சியினை வழங்கிய பின்னர் அவர்களை நிரந்தர ஆசிரிய நியமனத்தில் இணைத்துக் கொள்வதென்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்மொழி மூலமான பாடசாலைக் கல்வி அலுவலகங்களில் தற்சமயம் நிலவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு உரியவர்களை உள்வாங்கும் முகமாக விசேட பரீட்சையினை நடாத்தி ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தி வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு, கல்வியியலாளர்களினால் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதனைக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.

ஏற்கனவே இலங்கை நிர்வாக சேவையில் ஏற்பட்ட வெற்றிடங்களை அடுத்து 1990 இல் இவ்வாறான 104 நியமனங்கள் வழங்கப்பட்டதுடன் கடந்த 2003ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் 82 பேருக்கும் 2012ஆம் ஆண்டு வடமாகாணத்தில் 43 பேருக்கும் விசேட போட்டிப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பரமர் சங்கமம்



'நேரம் பொன்னானது' எண்ட வாக்குத்தமிழாக இருந்தாலும் அதனைச் செயலில் காட்டியவர்கள் எம்மைக் கட்டி ஆண்ட ஆங்கிலேயர் தான்.

அவர்களின் வருகை எம்மின சுதந்திரத்தைக் கட்டிப் போட்டது; கொத்தடிமையாக இண்டைக்கும் மீளமுடியாத இருட்டில் தள்ளி விட்டுள்ளது என்னவோ உண்மைதான்.

தன்தன் போக்கில் தமக்குட்பட்ட பகுதிகளை ஆண்டு கொண்டு இங்க வாழ்ந்த இனங்கள் நிம்மதியாகவோ, இன்றியோ வாழ்ந்து வந்த வரலாற்றில் ஆங்கிலேயரின் வருகை கரும்புள்ளி எண்டு சொல்லலாம்.

அதேவேளை அவர்களது வருகையால் கீழத் தேசத்தவர்கள் பெற்ற நன்மைகள் அனந்தமெண்டுதான் சொல்ல வேணும். கல்வி வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சி, பொருளாதாரம் இப்படிக் கனக்கக் கூறிக் கொண்டே போகலாம்.

அதில ஒண்டுதான் "இந்த நேரம் பொன்னானது" எண்ட சங்கதியும் வேலைத் தலங்கள் கல்விக் கூடங்கள் இவ்விதம் சகல விடயங்களிலும் நேரத்தைக் கடைப் பிடிக்கப் பழக்கியவன் அவனே!

போத்துக்கீசர் வந்து இங்கே கத்தோலிக்க ஆலயங்களையும், றோமன் கத்தோலிக்கத்தையும் பரப்பினர். ஒல்லாந்தர் வந்து அவர்களது கோவில்களை இடித்து அங்கலிக்கன் கோவில்களை நிறுவினர்.

போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் இங்கே முன்னதாக இருந்த இந்துக் கோவில்களை அழித்ததும் மறைந்து விடாத ஒன்றுதான்.

அதற்குப் பின்பாக வந்த பிரிட்டிஷ்சார் ஆங்கில மொழியையும், கிறிஸ்தவத்தையும் மட்டுமன்றி கல்வி, ஆங்கில மருத்துவம் இவற்றுடன் நேரக்கட்டுப் பாடுகளையும் வளர்த்தனர்.

அதனாலேயே எமது பிரதேசங்களில் மணிக்கூட்டுக் கோபுரம்களை நிறுவினர். யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம் அவர்களால் நிறுவப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை வைத்தே பலருக்குப் பல மறக்க முடியாத சம்பவங்கள் ஏற்பட்டிருக்கலாம். பரமர் சின்னப்பிள்ளையாக இருக்கேக்க கடையில மணிக்கூடுகளைப் பாத்துவிட்டு மணிக்கூடு வேண்டுமென அடம்பிடிக்க யாழ்.மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூட்டைக் காட்டி ஏமாத்தினதும் ஒரு சம்பவம்.

இந்த மணிக் கூடு செய்யும்கூத்துகளை ஊடகங்கள் அவ்வப்போது தோலுரித்துக் காட்டி வந்ததை எல்லாரும் அறிவார்கள். இப்ப டயலொக் நிறுவனம் அமைச்ச எலெற்றோனிக் மணிக்கூட்டுக்கை புறாக்கள் குடியிருப்பு வைத்துள்ள விசயம் பலருக்குத் தெரியாதது.

அனர்த்த காலங்களில் களவாடப்பட்ட மணிக்கூடுகளை இளவரசர் சாள்ஸ் 1997களில் திருத்திக் கொடுத்தார். அதுவும் பழுதுபடத்தான் டயலொக் நிறுவனம் புறாக்கூட்டை வைத்தது.

எல்லாத்தையும் பாத்துப் போட்டு யாழ்.மாநகர சபையே 9 இலட்சம் ரூபாவில் திருத்தப் போவதாகப் புதுவருசச் செய்தி சொல்லுது.

முன்னமெல்லாம் போகத்துக்குப் போகம் வயல், தோட்டங்களைச் செய்து சாப்பிட்டுப் போட்டுப் படுத்து கிடந்த எங்கட சனங்களுக்கு 'நேரம் பொன்னானது' எண்ட உணர்வைத் தூண்டி விட்டு சுறு சுறுப்பாக்கினதால இண்டைக்கு உலகமே சுருங்கி இரவு பகலாகப் பறந்து கொண்டிருக்குதுகள் இல்லையே பின்னை...

# திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் வவுனியாவில் அறிமுக நிகழ்வு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் 'திவிநெகும' திட்டத்தின் அறிமுக நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

'திவிநெகும' திட்டத்தினூடாக மக்களுக்கு கிடைக்கவுள்ள பயன்கள் மற்றும் அதனூடாக மக்கள் வங்கிகளில் எவ்வாறான கடன்களை பெறமுடியும் உள்ளிட்டவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன், வீட்டுத்தோட்டம் செய்தல், அதனூடாக மக்கள் போஷாக்கான உணவுகளைப் பெறுவது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

இதன்போது வங்கிகளினூடாக கடன் பெறும் வழிவகைகள் தொடர்பிலான கையேடுகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

இதனையடுத்து 'திவிநெகும' பயனாளிகள் சிலருக்கு கடன் திட்ட காசோலைகளும் வழங்கப்பட்டன.

வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநரின் பிராந்திய இணைப்பாளர் முகைதீன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மோகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கரைச்சி பிரதேசத்தில் 3 நாட்கள் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் 3 நடமாடும் சேவைகள் நடைபெற பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் ஒழுங்குகளை செய்துள்ளார்.

இன்று அக்கராயன் மகாவித்தியாலயத்திலும், நாளைமறுதினம் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலும், 21ஆம் திகதி திங்கட்கிழமை கரைச்சி பிரதேச செயலக வளாகத்திலும் இச சேவை நடைபெறவுள்ளது. இலங்கை மனித உரிமைகள நிலையத்தின் வேண்டுகோளின் பேரில் நடைபெறும் இச் சேவையில் அடையாள அட்டைகளை புதுப்பித்தல், புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் போன்ற சேவைகளைப் பெறமுடியும்.

அத்துடன் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவு சான்றிதழ் பிரதிக்கும் பொ[illegible]கள் விண்ணப்பங்களை [illegible]ப்பிக்க முடியுமெனவும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரையும் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் பொது மக்கள் பயன்பெறுமாறு அறிவித்துள்ளார். (90)

# சிறந்த தனிநபர் சுகாதார பழக்கவழக்கத்திற்கு வெகுமதிகள்

(கொழும்பு)

உலகின் முன்னணி டியோட்ரன்ட்ஸ் வகையான ரெக்ஸ்சோனா வர்த்தகநாமமானது, மக்களுக்கு வியர்வை மற்றும் உடல் நாற்றம் குறித்த விழிப்புணர்வுகளை வழங்கியதுடன், ஆண் பெண் இருபாலரிடையேயும் டியோட்ரன்ட்ஸ் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலான திட்டங்களை முன்னெடுத்திருந்தன. இதன் ஓர் அங்கமாக, அண்மையில் முன்னெடுத்த "ரெக்ஸ்சோனா கையடக்கத் தொலைபேசி" வாடிக்கையாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 60 வெற்றியாளர்களுக்கு அடுத்த ஒரு வருடத்திற்கான மாதந்தம் ஆயிரம் ரூபாய் ப்ரீபேய்ட் பெக்கேஜ் அடங்கிய Gjpa Samsung Galaxy Y Color Plus கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டன. நாடுபூராகவும் இடம்பெற்ற வாடிக்கையாளர் ஊக்குவிப்பு திட்டமானது 14,000 பேரை கவர்ந்திருந்தமை விசேட அம்சமாகும்.

"நான் கடந்த 4 வருடங்களாக நாளாந்தம் ரெக்ஸ்சோனா தயாரிப்பை பாவிக்கிறேன். இத்தயாரிப்பு எனக்கு புத்துணர்ச்சியை வழங்குவதுடன், வியர்வையையும் கட்டுப் படுத்துகிறது" என வெற்றியாளர்களில் ஒருவரான ராஜகிரியவைச் சேர்ந்த சன்துலா முனசிங்க தெரி வித்தார். மேலும் மற்றுமொரு வெற்றியாளரான மஹர[illegible] பிரதேசத்தை சேர்ந்த எச்.ஈ.டி.சம்பத் த[illegible]து பரபரப்பான நாளாந்த வேலைகளை எதிர்கொள்வதற்கு தகுந்த தன்னம்பிக்கையை ரெக்ஸ்சோனா வழங்கியுள்ளது எனவும், கடந்த 3 வருடங்களாக இத்தயாரிப்பை பாவித்து வருவதாக வும் தெரிவித்தார்.

டியோவின் உதவி வர்த்தகநாம முகாமையாளரான விதுஷி ரம்புக்வெல்ல கருத்து தெரிவிக்கையில்; "இத்துறையை பொறுத்தவரை, வியர்வை மற்றும் உடல் நறுமணம் குறித்து குறைவான விழிப்புணர்வும், டியோட்ரன்ட்ஸ் பாவிப்பதன் அனுகூலங்கள் குறித்தும் குறைந்தளவான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் காணப்படுவது பெரும் சவாலாக உள்ளது என்றார். நாளாந்த தனிநபர் சுகாதாரத்தில் டியோட்ரன்ட்ஸ் பாவனை மிக முக்கிய பங்களிப்பினை செலுத்துகிறது என்பதை தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்பை இப்போட்டி மூலம் பெற்றுக் கொண்டுள்ளோம். மேலும் நாம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வர்த்தகநாமத்தையும் பிரபல்யம் செய்கின்றோம்" என்றார்.

# பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்தோனேஷியா உதவும்

(கொழும்பு)

ஏற்றுமதி முதலீடு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி ஆகிய துறைகளில் இலங்கையை முன்னேற்றம் அடையச் செய்வதற்கான சகல ஒத்துழைப்பையும் இந்தோனேஷிய அரசாங்கம் வழங்கும் என இலங்கைக்கான இந்தோனேஷிய புதிய தூதுவர் ஹரிமவான் சுயிட்னோ உறுதியளித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் முதன் முதலில் சந்தித்த புதிய தூதுவர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடினார்.

இலங்கை மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தோனேஷிய அரசு உதவி வழங்க வேண்டும் என்றும் குறிப்பாக இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு அத்துறையில் விசேட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

மன்னார் பிரதேசத்தில் கடலட்டை அறுவடை வெற்றியளித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

**இரசாயனவியல்**

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

### முதலாம் இரண்டாம் தொகுதி உலோகங்கள் அமிலங்களுடன் தாக்கம்

கார உலோகங்களாகிய இலிதியம், சோடியம் பொற்றாசியம் ஆகியவை அமிலங்களுடன் தாக்கமுற்று ஐதரசனை விடுவிக்கும். இவ் அமிலங்களின் உப்புக்கள் உண்டாகும். தாக்கவீதம் இவ் ஒழுங்கில் அதிகரிக்கும்.

$$2\,Na + 2\,HCI \rightarrow 2\,NaCI + H_2\,I \uparrow$$

பொதுவாக $2\,M + 2H^{+} \rightarrow 2\,M^{+} + H^{2}\uparrow$

கார மண் உலோகங்களும் ஐதான அமிலங்களுடன் தாக்கமுற்று ஐதரசனை விடுவிக்கும்.

$$M + 2\,H^{+} \rightarrow M^{2+} + H_2$$

பெரிலியம் :- ஐதான சல்பூரிக் கமிலத்தில் இருந்தும் ஐதான ஐதரோக் குளோரிக் கமிலத்தில் இருந்தும் பெரிலியம் ஐதரசனை விடுவிக்கும். செறிந்த சல்பூரிக்கமிலத்தடன் வெப்பமேற்றும்போது கந்தகவீரொட்சைட்டு உண்டாகும்.

$$Be + 2\,HCI \rightarrow BeCI_2 + H_2$$
$$Be + 2\,H_2SO_4 \rightarrow BeSO_4 + SO_2 + 2\,H_2O$$

பெரிலியம் ஐதான நைத்திரிக்கமிலத்தடன் தாக்கமுறும்போது ஐதரசன் விடுவிக்கப்படுகின்றது. செறிந்த சூடான நைத்திரிக்கமிலம் பெரிலியத்துடன் தாக்கமுறும்போது தாக்கம் வீறாக நிகழ்ந்து நைதரசன் பரவொட்சைட்டு உண்டாகிறது.

$$Be + 4HNO_3 \rightarrow Be\,(NO_3)_2 + 2\,NO_2 + 2\,H_2O \uparrow$$

*குறிப்பு :-*

பொதுவாக உலோகங்கள் ஐதான அமிலங்களுடன் தாக்கமுறும்போது ஐதரசன் விடுவிக்கப்படும். இது அமிலங்களின் இயல்புகளில் ஒன்றாகும்.

செறிந்த நைத்திரிக்கமிலம், செறிந்த சல்பூரிக்கமிலம், ஐதான நைத்திரிக் கமிலம் ஆகியவை ஒட்சியேற்றும் கருவிகளாகத் தொழிற்படுகின்றன. இத்தகைய தாக்கங்களில் சல்பூரிக்கமிலத்திலிருந்து கந்தகவீரொட்சைட்டு நைத்திரிக்கமிலத்தில் இருந்து நைதரசனின் ஒட்சைட்டுகளும் உண்டாகின்றன.

**மக்னீசியம்:**

ஐதான HCI, செறிந்த HCI, ஐதான சல்பூரிக்கமிலம் ஆகியவற்றுடன் மக்னீசியம் தாக்கமுற்று ஐதரசனை விடுவிக்கும்.

உ -ம்: $Mg + H_2SO_4 \rightarrow MgSO_4 + H_2\uparrow$

ஆனால் பெரிலியத்தைப் போல் அல்லாது மக்னீசியம் ஐதான நைத்திரிக் கமிலத்துடன் தாக்கமுறும்போது நைத்திரிக்கமிலம் ஒரு ஒட்சியேற்றும் கருவியாகத் தொழிற்படுவதால், நைதரசனின் ஒட்சைட்டுக்களும் அமோனியம் நைத்திரேற்றும் நைத்திரிக்கமிலத்தின் செறிவுக்கேற்ப உண்டாகும்.

***உதாரணமாக:***

1) மிக மிக ஐதான நைத்திரிக்கமிலம் மக்னீசியத்துடன் தாக்கமுறும்போது ஐதரசன் வாயு உண்டாகிறது. இத்தாக்கத்தை நிகழ்த்த மக்னீசியத்தை நீரினால் மூடி, தாக்கம் ஆரம்பிக்கும் வரை ஐதான நைத்திரிக்கமிலத்தை துளித் துளியாக விட்டுக் கலக்க வேண்டும்.

$$Mg + 2\,HNO_3 = Mg\,(NO_3)_2 + H_2\uparrow$$

2) ஐதான நைத்திரிக்கமிலத்துடன் தாக்கம் நிகழும்போது விடுவிக்கப்பட வேண்டிய ஐதரசன் நைத்திரிக்கமிலத்தை தாழ்த்துவதால் நைத்திரைசு ஒட்சைட்டு, நைத்திரிக் ஒட்சைட்டு அமோனியம் நைத்திரேற்று ஆகியவை உண்டாகும்.

(a) நைத்திரசு ஒட்சைட்டு

$$Mg + 2\,HNO_3 \rightarrow Mg\,(NO_3)_2 + 2\,H$$
$$8H + 2\,HNO_3 \rightarrow 5H_2O + N_2\,O$$

(b) நைத்திரிக், ஒட்சைட்டு

$$6\,'H' + 2\,HNO_3 \rightarrow 2NO + 4H_2O$$

(c) அமோனியம் நைத்திரேற்று

$$8'H' + 2HNO_3 \rightarrow NH_4\,NO_3 + 3H_2O$$

3) செறிந்த நைத்திரிக்கமிலம் மக்னீசியத்துடன் தாக்கமுறும்போது நைதரசன் ஈர் ஒட்சைட்டு உண்டாகின்றது.

$$Mg + 4HNO_3 \rightarrow Mg\,(NO_3)_2 + 2NO_2\uparrow + 2H_2\,O$$

| | |
|---|---|
| நிறமற்ற | கபில |
| கரைசல் | நிறமான வாயு |

கல்சியம், பேரியம், துரந்தியம் ஆகிய மூலகங்கள் அமிலங்களுடன் கூடிய வீறுடன் தாக்கத்தில் ஈடுபடும்.

### I ஆம் I I ஆம் தொகுதி மூலகங்களின் இருக்கை

இத்தொகுதிகளைச் சேர்ந்த மூலகங்கள் தாக்கவிதம் மூடியவை. இதனால் இவை சுயாதீனமாகக் காணப்படுபவையல்ல.

இலிதியம் அலுமினிய சிலிக்கேற்றுகளாகவும் (இலெப்பிடோலைற்று, இசுப்போடியுமினே) பொறுப்பேற்றுகளாகவும் காணப்படுகிறது. சோடியம், சோடியம் குளோரைட்டாகக் கடல் நீரிலும், இந்துப்பிலும் காணப்படுகின்றது. சோடியம் நைத்திரேற்று, சோடியம் காபனேற்று, போரக்ஸ் $(Na_2\,B_4\,O_7\ 10H_2O)$ என்ற சேர்வைகளாகவும், சோடியம் பூமியின்மேல் ஓட்டில் காணப்படுகின்றது. உருபீடியம்,சீசியம் ஆகிய மூலகங்கள் மிக அற்ப அளவில் மேற்கூறிய கார உலோகக் கனிப்பொருட்களுடன் காணப்படுகின்றது. பிரான்சியம் என்ற மூலகம் இயற்கையில் தனியாகவோ அல்லது சேர்வை நிலையிலோ காணப்படுவதில்லை. அத்தினியம் என்ற மூலகத்தின் கதிற் தொழிற்பாட்டழிவின்போது தோன்றி அதன் நிலையற்ற தன்மையின் காரணமாக அழிந்து விடுகிறது.

பெரிலியம் என்ற உலோகம் அதன் ஒட்சைட்டாக, அலுமினியம் ஒட்சைட்டு சிலிக்கனீரொட்சைட்டு சேர்ந்து, பெரில் எனப்படும் $(2BeO.\ AI_2O_3.\ SnO_2)$ கனிப்பொருளாகக் காணப்படுகிறது. மக்னீசியம் அதன் காபனேற்றாக, சல்பேற்றாக, குளோரைட்டாக, பொற்றாசியம், கல்சியம் போன்ற மூலகங்களின் உப்புக்களுடன் காணப்படும்.

| | | |
|---|---|---|
| உ-ம் டொலமைற் | $MgCO_3$ | CaCO |
| கானலைற்று | $MgCI_2$ KCI | $6H_2O$ |
| எப்புரமைற்று | $MgSO_4$ | $7H_2O$ |
| மக்னீசைற்று | $MgCO_3$ | |

மக்னீசியம் குளோரைட்டு கடல் நீரிலும் காணப்படும்.

**கல்சியம்:**

இம் மூலகம் சுயாதீனமாகக் கிடைப்பதல்ல. பின்வரும் சேர்வை நிலையில் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1) | காபனேற்று : | சுண்ணாம்புக்கல் | $CaCO_3$ |
| | | பளிங்குக்கல் | $CaCO_3$ |
| | | சோக்கு (வெண்கட்டி) | $CaCO_3$ |

2) சல்பேற்று; கிப்சம் , $CaSO_4.\ 2H_2O$

3) புளோரைட்டு; புளோர்ஸ்பார் $CaF_2$.

4) பொசுப்பேற்று; பொசுப்போறைற்று $CaF_2$.

5) சிலிக்கேற்று ; பாறைகளிலும்

6) குளோரைட்டு: குளோறோபற்றைற்று $Ca_5\,(PO_5)_3\,CI$ கடல் நீரிலும் கல்சியம் உப்புக்கள் கரைந்து காணப்படும்.

**துரந்தியம் :**

துரந்தியமும் சுயாதீனமாகக் காணப்படுவதில்லை. சேர்வை நிலையில் துரந்தியம், காபனேற்றாக $(SrCO_3,)$ துரந்திரைற்று என்னும் கனிப்பொருளிலும், சல்பேற்றாக $SrSO_4$, செலத்தின் என்னும் கனிப்பொருளிலும் காணப்படுகிறது.

**பேரியம் :**

பேரியமும் சுயாதீனமாகக் காணப்படுவதில்லை. இதுவும் சல்பேற்றாக பேரைற்று அல்லது காரமான சுண்ணாம்புக்கல் என்னும் கனிப்பொருளிலும், பேரியம் காபனேற்றாக உவேதறைற்று என்னும் கனிப்பொருளிலும் காணப்படும்.

**இறேடியம் :**

அநேகமான யுரேனியம் கனிப்பொருள்கள் எல்லாவற்றிலும் சிறு அளவில் இறேடியத்தின் தாதுகள் காணப்படுகின்றன.
உதாரணம் :- பிச்பெளென்டே (கரிப்பிசின் மயக்கி)

**1 ஆம், 2 ஆம் தொகுதி மூலகங்களைப் பிரித்தெடுத்தல்**

இம்மூலகங்கள் சுயாதீனமாகக் காணப்படுவதில்லை. இவை கனிப்பொருட்களாகக் காணப்படுகின்றன. இக்கனிப்பொருளில் காணப்படும் சேர்வைகள் மிகவும் உறுதியானவை. இவற்றைப் பிரித்தெடுப்பது மிகவும் கடினமாகும். இவை அயன் சேர்வைகள் $M^+$ $M^{2+}$ அயன்களைக் கொண்டிருக்கும். இவ் உலோகங்களைப் பிரிக்க $M^+$ (1 ஆம் தொகுதி), $M^{2+}$ (2 ஆம் தொகுதி) அயன்களைத் தாழ்த்த வேண்டும். இதை இரசாயன முறைகளால் அல்லது மின்பகுப்பு முறைகளினால் நிகழ்த்தலாம். இம்முறைகளில் நீர்க்கரைசல்களை உபயோகிப்பது பயனற்றதாகும்.

(a) பாரம் குறைந்த, தாழ்ந்த ஆவிப்பறப்புடைய மூலகங்கள் (Li, Na, Be, mg, Ca) அவற்றின் உருக்கிய குளோரைட்டுகளை உருக்கி மின் பகுத்து பெறப்படும்.

அநேக மூலகங்கள் அவற்றின் கனிப்பொருட்களை, உலோகக் குளோரைட்டுகளாக மாற்றி பின்பு அக்குளோரைட்டுகளை உருக்கி மின்பகுத்து உலோகத்தைப் பிரித்தெடுக்கலாம். மின்பகுப்பின்போது கதோட்டில் நிகழும் பொது தாக்கங்கள் பின்வருமாறு தரலாம்.

$M^+ + e = M$ (தொகுதி I)
$M^{2+} + e = M$ (தொகுதி II)

உதாரணமாக சோடியத்தை எடுத்துக் கொள்வோம். இது உருகிய சோடியம் குளோரைட் மின்பகுப்பதால் தயாரிக்கப்படும். சோடியம் குளோரைட்டின் உருகுநிலை மிகவும் உயர்ந்ததாகவிருப்பதால் உருக்கும் பொழுது சிறிதளவு கல்சியம் குளோரைட்டும் சேர்த்து உருக்கப்படுகிறது. இதனால் கலவையில் உருகு நிலை ஏறக்குறைய $550^0C$ யில் வைக்கப்படும். காரீய (C) அனோட்டிலும், உருக்கு (Fe) கதோட்டுக்கும் இடையில் மின்பகுக்கப்படும். சோடியம் கதோட்டிலும், குளோரின் அனோட்டிலும் விடுவிக்கப்படும்.

$Na^+ + e^- = Na$ (கதோட்)
$2Cl^- - 2e^- = Cl_2$ (அனோட்)

குளோரின் சோடியத்தை ஓட்சியேற்றுவதைத் தவிர்ப்பதற்காக மின் பகுப்புத் தொட்டி ஒரு கம்பிவலையினால் கதோட்டறை அனோட்டறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(B) பாரமான கூடிய ஆவிப்பறப்பான மூலகங்கள் மின்பகுப்பு முறையினால் பிரித்தெடுக்கக்கூடியவையாக இருப்பினும், இவற்றின் ஆவிப்பறப்பியல்பை உபயோகித்து இம் மூலகங்களின் குளோரைட்டுகள் அல்லது ஒட்சைட்டுகளில் இருந்து வேறு மூலகங்களினால் தாழ்த்திப் பெற்றுக்கொள்வது கூடிய வசதியானதாகும்.

$M - 1 + M' \quad M'Cl + M$
$3M_2O + 2M'' \quad M_2O''_3 + 6M\uparrow$

என்ற பொதுத் தாக்கங்கள் இக்கருத்தை விளக்கும். இங்கே M', M" என்பவை முறையே ஒரு வலுவளவு மூன்று வலுவளவு உலோகங்களை குறிக்கும்.

கீழே தரப்பட்டுள்ள தாக்கங்கள் இக்கருத்தை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக பொற்றாசியத்தை, பொற்றாசியம் குளோரைட்டை சோடியத்துடன் வெப்பமேற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

$$\underset{(s)}{KCl} + \underset{(s)}{Na} = K + \underset{(g)}{NaCl}$$

இதேபோல் $\underset{(s)}{2RbCl} + \underset{(s)}{Ca} = \underset{(s)}{CaCl_2} + \underset{(g)}{2\,Rb}$

பேரியம் ஒட்சைட்டை அலுமினியத்தை உபயோகித்து உயர் வெப்ப நிலையில் தாழ்த்தி பேரியத்தை பெற்றுக்கொள்ளலாம்.

$$3BaO + 2Al \rightarrow Al_2O_3 + 3\,Ba$$

இத்தாக்கங்கள் நிகழ்வதற்கு முக்கிய காரணம் விளைபொருட்களில் உள்ள உலோகம் ஆவியாக அகற்றப்படுதல் ஆகும்.

**1 ஆம் 2 ஆம் தொகுதி மூலகங்களின் ஒட்சைட்டுகள்**

இம் மூலகங்கள் முறையே $M_2O$ (முதலாம் தொகுதி) MO (இரண்டாம் தொகுதி) என்ற ஒட்சைட்டுக்களைத் தரும். பெரிலியம் கல்சியம் ஆகியவற்றைத் தவிர்ந்த மற்ற ஒட்சைட்டுகள் எல்லாம் அயன் சாலகங்கள் ஆகும். இவை அதிக மூலவியல்புள்ள சேர்வைகள் ஆகும். இவை நீருடன் தாக்கமுறும்போது ஐதரொட்சைட்டுகள் உண்டாகும்.

உ-ம் : $Na_2O + H_2O \rightarrow 2NaOH$
$CaO + H_2O \rightarrow Ca(OH)_2$

இவை காபனீரொட்சைட்டுடன் தாக்கமுற்று காபனேற்றுக்களைத் தரும்.
உ-ம் : $K_2O + CO_2 \rightarrow K_2CO_3$
உ-ம் : $BaO + CO_2 \rightarrow BaCO$
இவை அமிலங்களில் கரைந்து உப்பையும் நீரையும் தரும்.

மக்னீசியம் ஒட்சைட்டு நீரில் அவ்வளவாகக் கரையாது. பெரிலியம் ஒட்சைட்டு நீரிலும் அமிலங்களிலும் அரிதில் கரைவதாகும். (கிட்டத்தட்டக் கரையாது).

இம் மூலகங்கள் $M_2O_2$ (1 ஆம் தொகுதி) $MO_2$ (2 ஆம் தொகுதி) என்னும் பரவொட்சைட்டுக்களைத் தரும். தாக்கத்தில் மிகையான ஒட்சிசன் உபயோகிக்க வேண்டும். இதிலியம் இவ்வாறு தாக்கம் புரியாது. இவை நீருடன் அல்லது ஐதான அமிலங்களுடன் தாக்கம் புரியும்போது ஐதரசன் பரவொட்சைட்டு உண்டாகிறது.

உ-ம் : $Na_2O_2 + 2H_2O \rightarrow 2\,NaOH + H_2O_2$
$BaO_2 + H_2SO_4 \rightarrow BaSO_4 + H_2O_2$

இது பரவொட்சைட்டுக்களுக்கு குறிப்பான தாக்கமாகும். ஐதரசன் பரவொட்சைட்டு வெப்பத்தினால் பிரிகையுறும் என்பதனால் தாழ்ந்த வெப்பநிலை உபயோகிக்கவேண்டும்.

$MO_2$ என்ற உயர் ஒட்சைட்டுக்களையும் 1 ஆம் தொகுதி மூலகங்கள் (இலிதியத்தை தவிர) தரும்.

I ஆம் II ஆம் தொகுதி மூலகங்களின் ஐதரொட்சைட்டுகளின் வன்காரவியல்பு

அநேகமாக இவ்வுலோகங்கள் அல்லது இவற்றின் ஒட்சைட்டுகள் நீரில் கரைந்து காரவியல்பைக் காட்டும். நீரில் கரையும்போது நிகழும் தாக்கங்களில் இம்மூலகங்களின் ஐதரொட்சைட்டுகள் உண்டாகின்றன.

உ-ம்
$2\,Na + 2H_2O = 2NaOH + H_2\uparrow$
$Ca + 2H_2O = Ca(OH)_2 + H_2\uparrow$
$Na2^O + H_2O = 2\,NaOH$
$CaO + H_2O = Ca(OH)_2$

1 ஆம் கூட்ட மூலகங்கள் உருவாக்கும் ஐதரொட்சைட்டுக்கள் மிகுந்த தாக்கவீதம் உடையவை. இவை நீரில் நன்றாகக் கரையும் இவ் ஐதரொட்சைட்டுகள் நீரில் கரையும்போது அதிக வெப்பம் உண்டாகின்றது. கார உலோக ஐதரொட்சைட்டுகள் மற்றைய தொகுதி மூலகங்களிலும் வன்காரவியல்புடையவை.

காரவியல்புகள் என்பவை பின்வரும் தாக்கங்களால் எடுத்துக்காட்டப்படுகின்றன.

1) காட்டிகளை நிறமாற்றமடையச் செய்தல்

உதாரணமாக : பினோல்த்தலின் அமில ஊடகத்தில் நிறமற்றதாயும் கார ஊடகத்தில் செந்நிறமாகவும் மாறும், பாசிச்சாயம் கார ஊடகத்தில் நீல நிறத்தை உடையதாகவிருக்கும். மெதயில் செம்மஞ்சள் கார ஊடகத்தில் செம்மஞ்சள் நிறத்தை உடையதாகவிருக்கும். காரங்களில் pH பெறுமானம் 7 இலும் கூடுதலாகவிருக்கும்.

2) அமிலங்களுடன் காரங்கள் தாக்கமுற்று உப்பும் நீரும் உண்டாகும்.
உ - ம் : $2\,KOH + H_2SO_4 = K_2SO_4 + 2\,H_2O$

3) காரக்கரைசல்கள் வேறு உலோக உப்புக் கரைசல்களுடன் சேர்த்தால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவ்வுலோகங்களின் ஐதரொட்சைட்டுகள் வீழ்படிவாகக் கிடைக்கும்.

உ-ம் :

a) $Fe_2(SO_4)_3 + 6NaOH \longrightarrow 2Fe(OH)\downarrow + 3Na_2SO_4$
செங்கபில வீழ்ப்படிவு

b) $FeSO_4 + 2NaOH \longrightarrow Fe(OH)_2\downarrow + Na_2SO_4$
அழுக்குப் பச்சை வீழ்ப்படிவு

c) $Mg(NO_3)_2 + 2NaOH \longrightarrow Mg(OH)_2\downarrow + 2NaNO_3$
வெள்ளை

சில சந்தர்ப்பங்களில் முதலில் வீழ்படிவு தோன்றி மேலதிகமாகச் சோடியம் ஐதரொட்சைட்டு சேர்க்கப்பட்டால் அவ் வீழ்படிவு கரையும்.

உ-ம் :

$ZnSO_4 + 2NaOH \longrightarrow Na_2SO_4 + Zn(OH)_2\downarrow$
வெள்ளை

$Zn(OH)_2 + 2NaOH \longrightarrow Na_2ZnO_2 + 2H_2O$
சோடியம் சிங்கேற் நீரில் கரைவது

$Al_2(SO_4)_3 + 6NaOH \longrightarrow 2Al(OH)_3\downarrow + 3Na_2SO_4$
வெள்ளை வீழ்ப்படிவு

$Al(OH)_3 + NaOH \longrightarrow NaAlO_2 + 2H_2O$
சோடியம் அலுமினேற் நீரில் கரைவது.

(தொடரும்..)

# என்னை முதல்வராக்க உதவுங்கள் ராஜீவிடம் கெஞ்சினார் ஜெயலலிதா

## — கருணாநிதி



எம்.ஜி.ஆர்.நோய்வாய்ப்பட்டு செயற்படாமல் உள்ளார். எனவே, என்னை முதல்வராக்குவதற்கு உதவ வேண்டும் என அப்போதைய பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு, ஜெயலலிதா கடிதம் எழுதினார் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறினார். தி.மு.க.வின் கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில், சென்னை மயிலை மாங்கொல்லையில் நடந்த பொங்கல் விழாவில் இதனைத் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில், எம்.ஜி.ஆர்.சிலையை திறந்து வைத்து, என்னை மிகக் கேவலமாக முதல்வர் ஜெயலலிதா பேசியுள்ளார். முதல்வர் பதவிக்காக எம்.ஜி.ஆரிடம் நான் கெஞ்சியதாகவும், அவர் பிச்சை போட்டார் எனவும் ஜெயலலிதா கூறியுள்ளார். எம்.ஜி.ஆரின் சிலையை திறந்து வைத்து, அவரது அருமை, பெருமைகளை பேசாமல், என் மீது வசை பாடியுள்ளார். முதல்வராக எம்.ஜீ.ஆர். இருந்த போது, ராஜீவ்காந்திக்கு, ஜெயலலிதா கடிதம் எழுதியது, பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது.

அக்கடிதத்தில், எனது செல்வாக்கைக் கண்டு, எம்.ஜி.ஆர். பொறமைப் படுகிறார். இதனால், எனக்கு முக்கியத்துவம் கொடுக்க மறுக்கிறார். நோய் வாய்ப்பட்டு, செயல்பாடாமல் எம்.ஜி.ஆர்.உள்ளார். எனவே, என்னை முதல்வராக்க உதவுங்கள் என ராஜீவ்காந்திக்கு எழுதிய கடிதத்தில் ஜெயலலிதா கூறியுள்ளார். இந்நிலையில், நான் முதல்வர் பதவிக்கு கெஞ்சினேன் என அபாண்டமாக குற்றம் சாட்டுகிறார்.

நாட்டில் நிலவும் மின்வெட்டு, அடிப்படை வசதிகள் பற்றாக் குறையை போக்க, நடவடிக்கை எடுக்காமல், என்மீது குற்றச் சாட்டுகளை முதல்வர் வீசுவது தேவையற்றது. மக்கள் நலனை காப்பதற்கு, அவர் முக்கியத்துவம் கொடுத்தால் நல்லதாக இருக்கும். வள்ளுவர் சிலை சிதிலமடைந்து வருவதை சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்க வைத்ததால், என்மீது ஆத்திரப்படுகிறார். தேவையற்ற ஆத்திரத்தை கைவிட்டு, நாட்டு நலனில் முதல்வர் ஜெயலலிதா அக்கறை செலுத்துவதே சிறந்தது. இவ்வாறு கருணாநிதி பேசினார்.




# மூன்று வயது சிறுமி மீது வல்லுறவு; கொடூரனுக்கு தூக்குத் தண்டனை




ஒரிசாவில் 3 வயது சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்த வாலிபருக்கு தூக்குத் தண்டனை விதித்து விரைவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஒரிசா மாநிலம் சம்பல்பூர் மாவட்டம் புதியபளி கிராமத்தைச் சேர்ந்தவர் திடு முண்டா (வயது -30). அவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி அதே ஊரைச் சேர்ந்த 3 வயது பழங்குடியின சிறுமியை உணவு வாங்கித் தருவதாகக் கூறி அழைத்துச் சென்றார்.

அவர் அந்த சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்து அந்த கிராமத்தில் இருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் உடலை வீசிவிட்டு சென்று விட்டார். இந்த சம்பவம் நடந்து 7 நாட்கள் கழித்து உடல் அழுகிய நிலையில் சிறுமி கண்டு பிடிக்கப்பட்டார். இது குறித்து வழக்குப் பதிவு செய்த பொலிஸார் முண்டாவை கடந்த ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி கைது செய்தனர். அவர் மீது கடத்தல், வல்லுறவு மற்றும் கொலை குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த சம்பல்பூர் மாவட்ட நீதிபதி அசோக் குமார் பாண்டா முண்டாவுக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

# ஹினா ரப்பானியின் அழைப்பை நிராகரித்தார் சல்மான் குர்ஷித்



எல்லையில் நிலவும் பதற்றத்துக்கு தீர்வு காண வெளியுறவு அமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று பாகிஸ்தான் கூறியதை இந்தியா நிராகரித்தது. காஷ்மீரில் பூஞ்ச் மாவட்டத்தில் கடந்த 8ஆம் திகதி ஊடுருவிய பாகிஸ்தான் இராணுவத்தினர் 2 இந்திய வீரர்களை கொன்றதுடன் ஒருவருடைய தலையையும் வெட்டி எடுத்து சென்றனர். இதைத் தொடர்ந்து எல்லையில் பதற்றம் நிலவுகிறது. எல்லை கட்டுப்பாடுக் கோடு தொடர்பான எல்லா பிரச்சினைகள் குறித்தும் இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்து பேசலாம் என்றும், பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் தயார் என்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பானி தெரிவித்தார்.

அவரது கருத்து குறித்து வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் டில்லியில் நிருபர்கள் கேட்டனர். அதற்கு பதிலளித்த குர்ஷித், வெளியுறவு அமைச்சர்கள் அளவிலான பேச்சு இப்போது சாத்தியமில்லை. இந்த விவகாரத்தில் இந்தியா அவசரப்படவில்லை. நிலைமைகளுக்கு ஏற்ப படிப்படியாக செயல்படுவோம் என்றார்.

முன்னதாக, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது, எல்லை நிலைவரம் குறித்து சல்மான் குர்ஷித்தும் இராணுவ அமைச்சர் அந்தோணியும் விளக்கினர். 8ஆம் திகதி நடந்த சம்பவம் குறித்து ஐ.நா. விசாரணை கோரிய பாகிஸ்தான், இப்போது பேச்சுவார்த்தைக்கு தயார் என்று கூறியிருப்பதன் மூலம் தனது நிலையில் இருந்து இறங்கி வந்துள்ளது என்று குர்ஷித் கூறியதாகவும் தெரிகிறது.

# சோபியா ஹக் திடீர் மரணம்



அலைபாயுதே படத்தில் பாடலொன்றுக்கு நடனமாடிய நடிகை சோபியா ஹக் புற்றுநோயால் காலமானார். தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றிய சோபியா ஹக் திரைப்படங்களில் நடித்துள்ளார். அலைபாயுதே படத்தில், செப்டம்பர் மாதம் என்ற பாடலுக்கு நடனமாட அழைத்து வந்தார் மணிரத்னம். அடுத்து விஜய் நடித்த உதயா என்ற படத்திலும் ஒரு பாடலுக்கு ஆடியிருந்தார். எம்.டிவி மற்றும் வி சனல்களில் தொகுப்பாளராகவும் இருந்த இவர், லண்டனில் வசித்து வந்தார். இந்நிலையில் கடந்த சில வருடங்களாக புற்று நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், திடீரென மரணமடைந்துள்ளார். சோபியாவின் மறைவுக்கு பிரபல திரைப்பட நட்சத்திரங்கள், தொலைக்காட்சி பிரபலங்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெயர்: ஜெ.லிஷானி
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

அகவை 08 இல்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

(5ஆம் பக்க தொடர்ச்சி...)

## நுகர்வுக்....

யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒருவராவது வெளிநாடுகளில் இருக்கிறார்கள். இவர்கள் அனுப்பும் பணம் தாய்நாட்டில் இருப்பவர்களின் நுகர்வுக் கலாசாரத்துக்கு கணிசமான அளவு தீனி போடுகின்றது.

இதுதவிர, வீடு கட்டுவதற்கு, விவசாயம் செய்வதற்கு, மீன் பிடிப்பதற்கு, தொழில் தொடங்குவதற்கு என பல வகையான பண உதவிகள் இலங்கை அரசாங்கத்தாலும், வெளிநாடுகளாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்பட்டுள்ளன. இதற்காகவே இலங்கையின் அனைத்து வங்கிகளும் வட பகுதியில் கிளைகளைத் திறந்து வைத்திருக்கின்றன. ஒரு சாதாரண தொழிலாளியின் நாளாந்தக் கூலியே 1000 ரூபாய்களுக்கு மேல் உள்ளது என்பதும், அந்தக் கூலியில் கூட விரும்பிய நேரத்தில் ஒரு தொழிலாளியைப் பிடிப்பது அரிது என்னும் போது, அங்குள்ள நிலைமையப் புரிந்து கொள்ள முடியும்.

இவையெல்லாவற்றின் மூலமும் தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வு அடிப்படையில் ஏற்றம் கண்டுள்ளது எனச் சொல்ல முடியாது என்ற போதிலும், மக்களுக்குக் கிடைத்த சுதந்திரமும் திடீரென ஏற்பட்ட அதீதமான பணப் புழக்கமும், அவர்கள் மத்தியில் உழைப்பின் அவசியத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுள்ளதுடன், நுகர்வுக் கலாசாரத்தை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது என்பதுதான் உண்மை.

எனவே யாழ்ப்பாணத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் குற்றச் செயல்கள், கலாசாரச் சீரழிவுகளின் அதிகரிப்புக்கு மற்றவர்களைக் குறை கூறுவதை விடுத்து, எம்மிடம் உள்ள குறைகளைக் களைய முயற்சிக்க வேண்டும். நுகர்வுக் கலாசாரத்தின் கட்டுக்கடங்காத வளர்ச்சியே எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது. அந்த எதிர்மறையான வளர்ச்சியை ஏற்படுத்திவிட்டதில், வர்த்தக நிறுவனங்கள், வெளிநாட்டு சக்திகள் என்போருடன், புலம்பெயர் தமிழர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. தமிழ் மக்களின் புலமை சார் சமூகமும், சமூகப் பொறுப்புள்ள ஸ்தாபனங்களும் கடுமையாக முயற்சிப்பதின் மூலமே இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். இந்த விடயத்தில் அரச எந்திரத்தினதும், சட்டத்தைப் பேணுபவர்களினதும் பங்கு என்பது, எமது முயற்சிகளுக்கு அடுத்த கட்டமானது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

இதற்கொரு உதாரணம் அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் 'மாவீரர் தின'த்தை ஒட்டி நடைபெற்ற சம்பவங்களாகும். அந்த உயரிய நிறுவனத்தில் கற்பிக்கும் சமூகம் சரியாகச் செயற்பட்டிருக்கின், ஆயுதப் படைகள் அங்கு நுழைய வேண்டிய தேவையே வந்திருக்காது. அதைத் தவறவிட்டு விட்டுப் பின்னர் அனுபவமற்ற மாணவர்களின் பின்னால் இழுபடும் நிலைக்கு அங்குள்ள ஆசிரிய சமூகம் தள்ளப்பட்டது கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

எனவே, இப்பொழுது வடக்கில் ஏற்பட்டு வரும் சமூகச் சூழ்நிலைகள் 1970களின் ஆரம்பத்தில் இருந்த நிலையை ஒத்ததாக உள்ளது என்ற உண்மையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்று இவ்வாறு ஏற்பட்ட ஒரு சூழல்தான் பின்னர் அழிவுகரமான யுத்தத்துக்கு இட்டுச் சென்றது.

இதைத் தடுப்பதில் வடக்கில் உள்ள புலமைசார் சமூகத்துக்கும், மக்கள் நலன் விரும்பிகளுக்கும் முக்கிய பொறுப்புண்டு. இந்தப் பொறுப்பை 'எரிகிற வீட்டில் பிடுங்கிறது லாபம்' எனச் செயற்பட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்போ, இதர தமிழ் தேசியவாதச் சக்திகளோ அல்லது புலம்பெயர் புலி சார்பு சக்திகளோ செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. அறிவுடனும், ஆற்றலுடனும், தூர நோக்குடனும் எமது தலைவிதியை நாமே நமது கைகளில் எடுக்க வேண்டும்..

# பாகிஸ்தான் போராட்டம் முடிவுக்கு வந்தது

## பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு




பாகிஸ்தானில் போராட்டம் நடத்தி வரும் தாகிர் அல் காத்ரியுடன் நடந்த பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.பாகிஸ்தானில் ஊழல பெருகி விட்டதால் அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என தேரிக் மின் ஹஜ்-உல்-குரான் கட்சியின் நிறுவனர் தாகிர் அல் காத்ரி கடந்த நான்கு நாட்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்.

தற்போதைய ஊழல் அரசு உடனடியாக பதவி விலக வேண்டும்.இல்லாவிட்டால் எகிப்து, துனிசியா, ஏமன் போன்ற நாடுகளை போல பாகிஸ்தானில் தொடர் போராட்டம் நடைபெறும என எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே ஊழல் வழக்கில் பிரதமரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தப்பிரச்சினை அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதால், இவரைக் கைது செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காத்ரியை கைது செய்தால் நிலைமை மோசமடையும் என்பதால், பேச்சுவார்த்தை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.இதற்காக மத விவகாரத்துறை அமைச்சர் குர்ஷித்ஷா தலைமையில் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய நான்கு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவர்கள் காத்ரியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து நாடாளுமன்ற முற்றுகை போராட்டத்தை கைவிடுவதாக காத்ரி அறிவித்தார். இதனை கேட்டதும் அவரது ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

உலகச் செய்திகள்

# மார்பகங்களால் முகத்தை அழுத்தி காதலனை கொலை செய்த பெண்



அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் காதலனின் முகத்தை மார்பகங்களால் அழுத்தி மூச்சு முட்ட செய்து கொலை செய்துள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங்டனின் எவெரெட் பகுதியைச் சேர்ந்தவர் டோனா லாங்கே(வயது -51).

இவரும், இவரது காதலரும் சமீபத்தில் நன்றாக குடித்துவிட்டு மோதலில் ஈடுபட்டனர். அப்போது காதலனை கீழே தள்ளிவிட்ட டோனா, அவரது முகத்தில் தனது மார்பகங்களை வைத்து அழுத்தியுள்ளார்.

இதையடுத்து அம்புலன்சுக்கு தகவல் கொடுத்துள்ளார் டேனா. ஆனால் அவர்கள் வந்தபோதே அந்த நபர் இறந்துவிட்டார்.

இதையடுத்து பொலிஸார் டோனாவிடம் விசாரித்தபோது, உண்மை தெரியவந்துள்ளது. சம்பவம் நடந்தபோது மேலும் இரு பெண் களும் அங்கிருந்ததும், அவர்களும் கடும் போதையில் இருந்ததும் தெரியவந்துள்ளது. அவர்களிடம் நடத்திய விசாரணையையடுத்து டோனாவின் வாக்குமூலம் உறுதி செய்யப்பட்டது.

# இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதல் பணயக்கைதிகள் உட்பட 50 பேர் பலி



அல்ஜீரியாவில் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலில் பணயக் கைதிகள் உட்பட 50 பேர் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான மாலியில் தீவிரவாதிகள் நாட்டின் பல்வேறு நகரங்களை கைப்பற்றி உள்ளனர்.


இவர்களை ஒடுக்குவதற்காக பிரான்ஸ் படைகள் களமிறங்கின. கடந்த வாரம் மாலிக்குள் நுழைந்த பிரான்ஸ் படைகள் விமானம் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளிடமிருந்து நகரை கைப்பற்றின.

இத்தாக்குதலில் 100இற்கும் அதிகமான தீவிரவாதிகள் பலியாயினர். மேலும் மாலியில் நிலைமை சீராகும் வரை அங்கேயே தங்கியிருக்க பிரான்ஸ் படைகள் முடிவு செய்தன.

இதனையடுத்து பிரான்ஸுக்கு தக்க பதிலடி கொடுக்கும் வகையில், மாலியின் அண்டை நாடான அல்ஜீரியாவில் உள்ள எண்ணெய் நிறுவனத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அத்துடன் பிரிட்டன் நிறுவனத்துக்கு சொந்தமான பிபி நிறுவனத்தில் பணிபுரிந்த, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஊழியர் உட்பட 50இற்கும் அதிகமானவர்களைக் கடத்தி சென்றனர். இதனை தொடர்ந்து கடத்தல்காரர்கள் பதுங்கியிருந்த பகுதியில் அல்ஜீரிய இராணுவம் நேற்று முன்தினம் வான் வழித் தாக்குதல் நடத்திய இதில் பணயக் கைதிகள் 35 பேரும், கடத்தல்காரர்கள் 15 பேரும் கொல்லப்பட்டனர், 26 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

# புதையலை தேடிய நபருக்கு கிடைத்தது அதிர்ஷ்டம்




அவுஸ்ரேலியாவில் புதையலைத் தேடிக் கொண்டிருந்த நபருக்கு, 5 கிலோ தங்கக் கட்டி கிடைத்துள்ளது.

அவுஸ்ரேலியாவில் விக்டோரியா மாகாணத்தின் பாலார்ட் என்ற நகருக்கு அருகே மெட்டல் டிடெக்டரின் உதவியுடன் புதையலை நபர் ஒருவர் தேடிக் கொண்டிருந்தார். அப்போது தரைக்கு கீழே இரண்டடி ஆழத்தில் உலோக கட்டி இருந்ததால் பீப் என்ற ஒலி எழுந்தது.

இதனையடுத்து அந்த இடத்தைத் தோண்டி பார்த்ததில், சுமார் ஐந்தரைக் கிலோ எடையுள்ள தங்கக் கட்டி கிடைத்தது, இதன் விலை 3 இலட்சம் டொலர்களுக்கு மேல் என்று கருதப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவுஸ்ரேலியாவில் சூடுபிடித்த தங்க வேட்டையின் போது, இந்த இடம் தங்கம் தேடுவோர் மத்தியில் பிரபலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# இறைச்சிக்காக கடத்தல் 600 பூனைகள் மீட்பு



சீனாவில், ஹோட்டல் ஒன்றுக்கு இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட 600 பூனைகள் மீட்கப்பட்டன. சீன மக்கள் அனைத்து பிராணிகளின் இறைச்சியை பாகுபாடின்றி விரும்பி சாப்பிடுவர்.சீனாவின் மத்திய பகுதியில் உள்ள, சாங்ஹா என்ற இடத்திலிருந்து, குவாங்டாங் மாகாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு இறைச்சிக்காக 600இற்கும் அதிகமான பூனைகள் 50 மூங்கில் கூடைகளில் அடைத்து எடுத்துச் செல்லப்பட்டன.பூனைகளை சுமந்து சென்ற லொறி நேற்று முன்தினம் ஒரு இடத்தில் விபத்துக்குள்ளாகி நின்றுவிட்டது. உடனடியாக இந்த லொறியும் மீட்கப்படவில்லை.

கூடைகளில் அடைக்கப்பட்டிருந்த பூனைகள் பல நாட்களாக பட்டினி கிடந்ததால், 100 பூனைகள் இறந்து விட்டன. இதனால், அந்த பகுதியில் துர்நாற்றம் வீசியது.இதை அறிந்த மிருக பாதுகாப்பு ஆர்வலர்கள், மீதமுள்ள பூனைகளை மீட்டுள்ளனர். இந்த பூனைகளை பாதுகாக்கும் பொருட்டு, அதற்குரிய விலையை கொடுத்து விடுவதாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# ஒபாமாவின் சகோதரர் தேர்தலில்



கென்யா நாட்டின் மாகாண தேர்தலில், ஒபாமாவின் சகோதரர் போட்டியிட உள்ளார்.அமெரிக்க அதிபர் ஒபாமாவின் தந்தைக்கு நான்கு மனைவிகள். ஆன் துன்ஹாம் என்பவருக்கு பிறந்தவர் தான் பராக் ஒபாமா.ஒபாமா தந்தையின் மற்றொரு மனைவிக்கு பிறந்தவர் மாலிக் ஒபாமா. கென்யா நாட்டை சேர்ந்த மாலிக் ஒபாமா, ஒரு அலுவலகத்தில் கணக்காளராக பணியாற்றி வருகிறார். சகோதரரை போல, தானும் அரசியலில் குதிக்க திட்டமிட்டுள்ளார்.

# பிரான்ஸ் உளவாளி கொலை தீவிரவாதிகள் அட்டூழியம்




பணயக் கைதியாக பிடித்து வைத்திருந்த பிரான்ஸ் நாட்டை சேர்ந்த நபரை கொன்று விட்டதாக சோமாலிய தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.


கடந்த 2009ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டை சேர்ந்த டெனிஸ் அலெக்ஸ் என்பவரை சோமாலிய தீவிரவாதிகள் பணயக் கைதியாக பிடித்துச் சென்றனர்.

அந்நபரை மீட்பதற்கு கடந்த வாரம் பிரான்ஸ் இராணுவம் முயற்சி செய்தது. அந்த முயற்சியை முறியடித்த தீவிரவாதிகள், அவரைக் கொலை செய்து விட்டதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான வீடியோவும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதில், பிரான்ஸ் ஜனாதிபதிக்கு செய்தி ஒன்றை அலெக்ஸ் வாசிப்பது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது.

ஆனால் அலெக்ஸை மீட்கும் முயற்சியின் போது, அவர் கொல்லப்பட்டு விட்டதாக பிரான்ஸ் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# வறுமையற்ற தேசம் படைக்க ஒருங்கிணைந்து செயற்படுவோம்




(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசங்களை வறுமையற்ற பிரதேசமாக மாற்ற இன, மத,சமூக, அரசியல் வேறுபாடுகளிற்கு அப்பால் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வறுமையற்றதோர் இலங்கை தேசம் எனும் தொனிப்பொருளிலான வாழ்வின் எழுச்சி (திவிநெகும) தொடர்பான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற போதே அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாண்டு வறுமையிலிருந்து எமது பிரதேசங்களை மீண்டெழச் செய்கின்ற வேலைத் திட்டங்களையே முன்னெடுக்கவுள்ளோம். வாழ்வின் எழுச்சியினை நடைமுறைப்படுத்துவதற்கு பல தடைகள் இருந்தன. எனினும் எமது பிரதேசங்களை இன, மத, சமூக, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்.

வறுமையற்ற பிரதேசமாக எமது பிரதேசங்களை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளையும், அதற்கான தீர்வுகளையும் இனங்காணும் வகையில் இச் செயலமர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த பிரதேசங்களில் வறுமையை நீக்குவதற்கான தொழில் முயற்சிகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இவ் வாழ்வின் எழுச்சி செயற்றிட்டத்தின் மூலம் பெருந்தொகையான வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்கள் பயனடையவுள்ளன. எனவே இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற அரச உத்தியோகத்தர்கள் வறுமை எங்குள்ளதோ அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். எத்தகைய பாரபட்சமான செயற்பாடுகளிலும ஈடுபடக்கூடாது என அவர் மேலும தெரிவித்தார்.

இதேவேளை, தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் அஞ்சலிதேவி தலைமையிலும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையிலும் பயனாளிகளுக்கான செயலமர்வு இடம்பெற்றதுடன், இந்நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வுகளில், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகணேஸ்வரன், ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் சார்ள்ஸ், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


## கொடிகாமம் கொலை வழக்கு சந்தேகநபர்கள் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருவரை பொல்லுகளால் அடித்துக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் 14.02.2011 அன்று இடம்பெற்றுள்ளது. கொடிகாமத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் அமிர்தலிங்கம் என்பவரே இச்சம்பவத்தில் கொலைசெய்யப்பட்டவராவார். இவ்விடயமாக பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். சந்தேகநபர் தலைமறைவாகியிருந்ததால் பொலிஸாரும் விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் புலன் விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் கடந்த 4 ஆம் திகதி கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்களைக் கைதுசெய்ததுடன் விளக்கமறியலில் வைத்துள்ளதாக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (இ)



கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் அமைக்கப்படவிருக்கும் பஞ்சதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்றுக் காலை இடம்பெற்றபோது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பங்குபற்றி அடிக்கல் நாட்டிவைப்பதைக் காணலாம். (09)

## மன்னாரில் கஞ்சா வியாபாரம்; உவர்மலைவாசி கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சா கடத்திய நபர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

ஒரு கிலோ 130 கிராம் நிறையுள்ள கஞ்சாவை தலைமன்னார் பகுதிக்கு கடத்திச் சென்ற நபர் ஒருவரை மன்னார் பொலிஸார் மடக்கிப் பிடித்ததோடு மன்னார் நீதிமன்றிலும் ஆஜர்படுத்தியுள்ளனர். உவர்மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரினாலேயே இக்கஞ்சா கடத்தப்பட்டதாகவும் கடந்த 13 ஆம் திகதி மாலை வேளையில் இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அரசியலிலிருந்து பிரதமர் ஓய்வு?

(கொழும்பு)

உடல் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு பிரதமர் தி.மு. ஜயரத்ன அரசியலில் இருந்து ஓய்வு பெற தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஓய்வுபெறவுள்ளதை அடுத்து கம்பளைத் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவி பிரதமரின் மகனுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விரைவில் இந்நியமனம் இடம்பெறுமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாடாளுமன்றத்தில் தி.மு. ஜயரத்னவிற்கு பதிலாக அவரது மகன் அனுராத ஜயரத்ன நியமிக்கப்படலாம் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச...

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் றிசாட் பதியுதீன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவர் கரிமாசுயித்தே, இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் குமார் மல்லிமராட்சி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும், அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து யாழ். நூல் நிலையத்திலிருந்து அதிதிகள் மேள் வாத்திய இசை முழங்க துரையப்பா விளையாட்டரங்கப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு கண்காட்சிக் கூடத்தை அமைச்சர் ட்க்ளஸ் தேவானந்தா, அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை அதிதிகளுடன் இணைந்து வழங்கி வைத்ததைத் தொடர்ந்து அதிதிகள் கண்காட்சி கூடங்களினை சுற்றிப் பார்வையிட்டனர்.

இதன்போது கண்காட்சியில் தமது பொருட்கள், சேவைகளைக் காட்சிப்படுத்திய நிறுவனங்கள் தமது பொருட்கள், சேவைகள் குறித்து அதிதிகளுக்கு விளக்கங்களை வழங்கியதுடன் பயன்பாடு குறித்தும் காண்பித்தனர்.

இவ்வாறு நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தமது பொருட்கள், சேவைகளை இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுததியிருந்தன.

மேலும் இந்தக் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள், வெளிநாட்டு இயந்திர உபகரணங்கள், இலத்திரனியல் பொருட்கள், அச்சு இயந்திரங்கள், உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், புடவைகள், பொதிசெய்யப்பட்ட உணவு வகைகள், வாகனங்கள், துவிச்சக்கர வண்டிகள் என்பன உள்ளிட்டவை இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சி தொடர்ந்து இன்றும் நாளையும் முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பார்வையிடமுடியும். இதன்போது பொருள் விற்பனையும் இடம்பெறுமெனவும் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

### சிறுமி...

வலை விரித்திருப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ)

### கெற்பேலியில்....

மேற்படி காணியை இராணுவத்தினருக்கு வழங்குவதான அனுமதிக் கடிதம் கெற்பேலி கிராம அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கிராம அலுவலர் காணி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் அவ்வதிகாரி மேலும் கூறினார். (25)

### ஷிராணி....

பாதிப்பை ஏற்படுத்தும். நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான தேவையற்ற தலையீடுகள் நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் பாதகத் தன்மையை ஏற்படுத்தும்

இலங்கை வரலாற்றில் நிறைவேற்று அதிகாரம் பல சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பதவிக்காக முன்னாள் சட்ட மா அதிபரும், அமைச்சரவையின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் இந்த நிலைமை நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை பாதிக்கும் குறிப்பாக மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் போன்ற முனைப்புக்களில் எவ்வளவு வெளிப்படைத்தன்மை காணப்படும் என்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

### தமிழ்,...

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளாலும், கடற்படையின் கட்டுப்பாடுகளாலும் தாம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் போரினால், இடம்பெயர்ந்த, தமிழ், முஸ்லிம்களின் மீள்குடியமர்வு குறித்துக் கவனம் செலுத்தப்பட்டதாகவும், மன்னாரில் இனரீதியான பதற்றநிலை ஏற்படக் கூடிய சூழல் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### அரசாங்கங்கள்...

நடவடிக்கையும் இல்லை. இந்த நிலையில் இந்தியத் துணைத் தூதுவர் இரு நாட்டு மீனவர் சமாசங்களும் பேசித் தீர்வு காண வேண்டும் என்று தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே அன்றி எமது பிரச்சினையை தீர்ப்பதற்கான வழியில்லை.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் இருநாட்டு மீனவர்களும் இப்பிரச்சினை பற்றி பேசி வருகின்றோம் இறுதியாக கச்சைதீவிலும் பேசியிருந்தோம் இருந்தும் எவ்விதமான நன்மைகளும் ஏற்படவில்லை.

எனவே இந்த மீனவர் பிரச்சினைகளுக்கு இருநாட்டு அரசாங்கங்களும் பேசி விரைவில் தீர்வைக்காண முன்வர வேண்டும் இரு நாட்டு அரசாங்கத்திற்கும் இந்த மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் வடக்கில் இடம்பெறவேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்று அவர் தெரிவித்தார். (02)

# தற்போதைய அரசாங்கமே சட்டத்திற்கு மதிப்பளிக்கிறது

## ஜனாதிபதி தெரிவிப்பு



அரசியலமைப்பிற்கு அமைவாகவே அரசாங்கம் செயற்படுகின்றது. இந்த அரசாங்கம் தான் சட்டத்திற்கு மதிப்பளிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நெதர்லாந்து நாட்டின் கடனுதவியின் கீழ் 51 மில்லியன் யூரோ செலவில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய மீன்பிடி ஏற்றுமதி துறைமுகத்தை டிக்கோவிட்டவில் நேற்றைய தினம் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஊழல் பேர்வழிகள் எங்கிருந்தாலும் தராதரமின்றி தண்டிக்கப்படுவர். அவ்வாறு தண்டனை வழங்குவதற்கு ஒருபோதும் அரசாங்கம் பின்நிற்கபோவதில்லை.

தற்போதைய அரசாங்கம் அரசியலமைப்பிற்கு அமைவாகவே செயற்படுகின்றது. இந்த அரசாங்கம் தான் சட்டத்திற்கு மதிப்பளிக்கின்றது. அத்துடன் நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஆகக்கூடுதலான அர்ப்பணிப்பை அரசாங்கம் முன்னெடுக்கும்.

போதைப் பொருள் பாவனை சமூகத்தை சீரழிக்கும் ஆயுதமாக மாறியுள்ளது.

தீவிரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டது போன்று போதைப் பொருள் பாவனையில் இருந்து எதிர்கால சந்ததியை மீட்க அனைவரும் முன்வர வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். 2008 ஆம் ஆண்டில் இந்த மீன் ஏற்றுமதி துறைமுக நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கட்டுநாயக்க விமானநிலையத்திற்கருகில் 19.8 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் வாழ்வின் எழுச்சி ஆரம்ப விழா கோலாகலம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் அறிமுக விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றுள்ளது.

வறுமையற்றதோர் இலங்கையை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட இந்த விழாவில் பல்வேறு அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நேற்று மாலை 5.15 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் அமைச்சர் ரிசாட் பதியுதின் நாடாளுமன்ற உறுப்பினர் உவைஸ் பாறூக் மற்றும் முல்லை அரச அதிபர் மற்றும் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் குகநாதன், பொதுமக்கள் என்று நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (04)

# மகளை கொலை செய்த சவுதியின் உதவி வேண்டாம்

## ரிசானாவின் தாய் கூறுகிறார்

என்னுடைய மகளை கொலைச்செய்த சவுதி அரசாங்கத்தினதோ அல்லது அந்த நாட்டைச் சேர்ந்த நபர்களின் எந்த உதவிகளும் தங்களுக்கு வேண்டாம் என்று சவுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஷானாவின் தாய் அஹமது செய்யது பரீனா தெரிவித்துள்ளார்.

அவ்வாறான எந்த உதவிகளையும் தான் பெற்றுக்கொள்ளத் தயாரில்லை என்று குறிப்பிட்டுள்ள ரிஷானாவின் தாயார், சவுதியைச் சேர்ந்த பலர் தனக்கு உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அவ்வாறான அன்பளிப்புகளை எடுத்துக்கொண்டு தன்னுடைய வீட்டுப் பக்கம் வரவேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். - கொழும்பு பஸ் மீது நாவற்குழியில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பேருந்தின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். நாவற்குழியில் வைத்து நேற்றிரவு 10.45 மணியளவில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தாக்குதலினால் பேருந்தின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன. தாக்குதலில் பயணிகளுக்கு எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்லை. எனவும் இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (25)

# முல்லையில் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸ் நடமாடும் சேவை இன்று நடைபெறவுளது. முல்லை சிலாவத்தை தமிழ் வித்தியாசாலையில் இடம்பெறவிருக்கும் இந்த நடமாடும் சேவையில் பிறப்பு இறப்பு மற்றும் திருமணப் பதிவுகள் இடம்பெறும். அத்துடன் மருத்துவ சேவைகளும் வழங்கப்படும். காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இந்தச் சேவை இடம்பெறவுள்ளது. (04)

# ஆசிரியரின் வீட்டில் நகைகள் திருட்டு

ஆசிரியையின் வீட்டில் நுழைந்த திருடர்கள் சுமார் பதினைந்து இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நகைகளை திருடிச்சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வியாழக்கிழமை இரவு தெல்லிப்பளை கிழக்கு ஆனைக்குட்டி மதவடிக்கு அருகாமையில் உள்ள குறித்த ஆசிரியையின் வீட்டில் புகைக்கூட்டின் வழியாக நுழைந்த திருடர்கள், இந்த துணிகரமான திருட்டை மேற்கொண்டுள்ளனர்.

வீட்டினுள் தனது கைப்பையில் குறிப்பிட்ட நகைகளை வழமையாக வைத்திருப்பதாகவும் அதேபோன்று நேற்று முன்தினமும் இரவு நகைகளை பாதுகாப்பாக வைக்கும் இட்த்தில் வைத்துவிட்டு படுக்கைக்குச் சென்றுள்ளதாகவும் ஆசிரியை தெரிவித்தார்.

காலையில் அயல் வீட்டில் உள்ள சிறிய பிள்ளையொன்று வந்து டீச்சருடைய கைப்பை வெறும் காணியில் காணப்படுவதாக கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து தனது கைப்பை வைத்த இடத்திற்குச் சென்று பார்த்த வேளையில் கைப்பை இல்லாததைக் கண்டதுடன் குறிப்பிட்ட வெற்றுக் காணியில் சென்று கைப்பையை உறுதிப்படுத்திய பின்னர் தெல்லிப்பளை பொலிஸாரிடம் களவு சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது. தெல்லிப்பளை பொலிஸார் குறிப்பிட்ட களவு சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளைத் தோற்கடித்ததன் பரிசு இலங்கைக்கு எதிரிகள் அதிகரிப்பு

## என்கிறார் அமைச்சர் வீரவன்ச

புலிகளைத் தோற்கடித்ததன் காரணமாக இலங்கைக்கு எதிரிகள் அதிகரித்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சில மேற்குலக நாடுகளும், தேசப்பற்று இல்லாத இலங்கையர்களை உள்ளடக்கிய சில அரச சார்பற்ற நிறுவனங்களும் முயற்சித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து, அரசாங்கத்திற்கு எதிராக தீர்மான த்திற்கு ஆதரவு திரட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையை சர்வதேச சமூகத்திற்கு ஒரு மோசமான நாடாக சித்தரிக்க இவர்கள் முனைகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போன்றே பிலிப்பைன்சும் பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்துள்ளதாக சுட்டிக்காட்டிய விமல் வீரவன்ச, ஆனால் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கு எதிராக ஐநாவின் எந்த அறிக்கையும் வெளியாகவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.



இது போன்ற வெளிசக்திகளின் தலையீடுகளுக்கு, புலிகள் தோற்கடிக்கப்பட்டது தான் காரணமென்றும் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் கூறியுள்ளார்.

# இ.போ.ச. குடைசாய்ந்து 12 பேர் படுகாயம்

மன்னார்- தலைமன்னார் வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று குடைசாய்ந்ததில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரை நோக்கி பயணித்த பஸ் வண்டியே கரிசல் இரண்டாம் கட்டை சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நேற்று காலை 10.00 மணியளவில் குடைசாய்ந்துள்ளது.




சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களில் 4 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தரம் 10 மாணவனுக்கு மோசமான பகிடிவதை

பகிவதையினால் பாதிக்கப்பட்ட 10 ஆம் தர மாணவன் ஒருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடை பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு 10 ஆம் தரத்திற்கு புதிதாகச் சென்ற மாணவனே அதே பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களால் பகிடிவதைக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவருடைய காதில் இரத்தம் வருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

NALIN IT

யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில் நாம்

hp உடன் 96வது காட்சிக்கூடத்தில்...

கண்காட்சியை முன்னிட்டு Laptops, Brandedsystems, Printers, Scanners போன்றவற்றிற்கு விசேட விலைக்குறைப்பு...





MEGA OFFER WITH LAPTOPS BRANDEDSYSTEMS

18,19,20 ஆகிய தினங்களில் எமது கண்காட்சி கூடத்திலும் நேரடியாக எமது காட்சியறையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

NALIN INFORMATION TECHNOLOGIES Pvt.ltd
195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.
T.P-0212221121/1166 HOTLINE 0777667974/5 facebook/nalinit

(C/1782)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.